நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 12 | நவம்பர் 91 | விலை 5/-


# சாண் ஏற முழம் சறுக்கும்!

இந்த இதழ் தலையங்கத்தின் முதலாவது வரியை எழுதுகிறபோது அரச படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு விட்டதாகவும் சங்குப்பிட்டித் துறையை படையினர் கைப்பற்றி விட்டதாகவும் வானொலி அலறுகிறது. ஒய்வொழிவற்ற விமானக் குண்டு வீச்சுகளில் யாழ்ப்பாணம் கதிகலங்கிப் போயிருக்கிறது என்று ஒரு ஆங்கிலத் தினசரியின் நகரப் பதிப்பு போகிற போக்கில் தகவல் தருகிறது.

"எந்தக் கணமும் யாழ்ப்பாணத்தைப் பிடித்து விடுவோம்" என்று அரசு தரப்பில் "குரல் தர வல்ல" அதிகாரி ஒருவர் முழங்குகிறார். புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விரைவில் சயனைட் குப்பியைக் கடித்து விடுவார் என்று தன்னுடைய உள்ளுணர்வு சொல்வதாக அரசபடைத் தளபதிகளிலொருவர் விஜய விமலரத்தின சொல்கிறார். (உணர்வற்றவர்களுக்கு உள்ளுணர்வு என ஒன்று இருக்குமா என்பதை நாம் இன்னும் ஸிக்மண்ட் ஃபிராய்ட் என்கிற உளவியலாளரின் நூல் தொகுப்புகளில் தேட ஆரம்பிக்கவில்லை) வடக்குக் கிழக்கில் ராணுவ ரீதியான வெற்றியை நிலைநாட்டி விட்டுக் கூடவே சமஷ்டி முறையைத் தரவேண்டும் என்று முன் மொழிகிறார் ஜனாதிபதியின் புதிய தத்து(வ)ப் பிள்ளை தயான் ஜயதிலக அவர்கள். யாழைக் கொணர்ந்திங்கு மீட்டியதால் ஒரு யாசகன், மன்னனிடமிருந்து" பரிசாகப் பெற்ற நிலமான யாழ்ப்பாணத்தில் அப்படி என்னதான் மோகம் இந்த அரசுக்கு ?



இராணுவ மேலாதிக்கம் பெற்ற பிற்பாடு பேசுவோம் ? என்ற நினைப்பில் பேச்சுவார்த்தைச் சந்தடிகளும் ஓய்ந்து விட்டன என்று தெரிகிறது. திட்டங்கள் தீட்டப்படுவதும் அதே வேகத்தில் காற்றில் வீசப்படுவதும் புதிய திட்டம் வருவதும் அதனை எதிர்க்கட்சியினர் எதிர்ப்பதும் எமக்குப் பழகிப் போன சமாச்சாரம். லலித்–காமினி இனவாதக் குழுவினர் அரசு கொண்டுவரக் கூடிய எந்தத் திட்டத்தையும் எதிர்ப்பர் என்பது அண்மைக்கால நடவடிக்கைகளிலிருந்து தெரிகிறது. சமஷ்டி முறைக்கு தேசிய அங்கீகாரம் தேவை என்று அவர்கள் சொல்கிற போது அத்தேசியம் சிங்களத் தேசியம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.


மறுபுறத்தில் வடக்குக் கிழக்கைத் துண்டிப்பதே அரசின் நோக்கம் என்பதும் இது பாரிய அளவில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் வலிவைக் குறைக்கும் என்பதும் வெள்ளிடைமலை. மணலாறு போன்ற குடியேற்றங்களை அரசு ஒருவேளை விரும்பினாலும் கூட, இராணுவம் விட்டுக் கொடுக்கவே மாட்டாது. எனவே இந்த அரசுக்கு மட்டுமல்ல இப்போதுள்ள அரசியல் யாப்பிலியங்கும் எந்த அரசிற்கும் எங்களது பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வலு, விழைவு, வீச்சு என்பன கிடையாது.

துக்ககரமான உண்மை; மேலும் உண்மை கொடிது. யாழ்ப்பாணத்தைப் பிடிப்பது என்பது இந்தப் பின்னணியில் ஒரடி முன்னால் - ஈரடி பின்னால் என்று லெனின் சொல்லியது போலத்தான். ராணுவ பலத்தால் வடக்கு கிழக்கு முழுவதையும் கட்டி ஆண்டாலும், அடிப்படை இனத்துவப் பிரச்சினையைத் தீர்க்காதவரை அரசு தேசியங்களை ஒடுக்குவதில் வெற்றிபெற முடியாது.

இந்த வகையில் புலிகளை முற்று முழுதாக அழித்து விடுவது என்ற அரசின் நினைப்பும் கனவுதான். ஒரடி முன்னால் இட்டு, எடுக்த அடிக்கு அடுத்த அடியில் கண்ணிவெடி என்பதே உலகம் முழுவதும் கொரில்லாக்கள் வழங்குகின்ற பாடம். மறுபுறத்தில், வடக்குக் கிழக்கு மக்களின் உரிமைகள், ஐக்கியம், ஜனநாயகம் என்பவற்றை விட தமது சொந்த அதிகாரத்துவத்தின் தனித்தன்மையும் மேலாட்சியுமே தலைமையானதும் முதன்மையானதும் என்று கருதுகிற விடுதலைப் புலிகள் இப் பிரச்சினையில் அரசியல் வழிமுறையிலும் சரி, இராணுவ வழி முறையிலும் சரி எதிலுமே தீர்மானகரமான முடிவைக் காணும் எல்லைக்குப் போக முடியாமல் "ஏணியும் பாம்பும்" விளையாட்டுப் போல ஏணியில் ஏறிப் பாம்பால் சறுக்கி வீழ்கிறார்கள். அவர்களுக்கும் சாண் ஏற முழம் சறுக்குகிறது.

முடிவில் இருதரப்பும் வெற்றி பெற முடியாத ஒரு போராட்டமாகவே இது நீளப் போகிறது. வடக்குக் கிழக்கு மக்களின் நிலையோ பயங்கரமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு பூரணமான அரசியல் மீளாய்வு நமக்கு இப்போது தேவை. பேச்சுவார்த்தைகள் வருமென்றாலும் சர்வதேசப் பங்களிப்பு ஐ.நா. நடுநிலைமை ஊடாக மட்டுமே அது நடாத்தப்பட வேண்டும். எல்சல்வடோர் நமீபிய உதாரணங்கள் நமக்கு முன்னுள்ளன.



சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி...

கொஞ்சக் காலத்துக்கு முன்பு திருமலையில் மேடையேற்றப்பட்ட நாடகமொன்றில் வந்ததாக நான் கேள்விப்பட்ட காட்சி ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

வெளி நாட்டில் இருக்கும் மகனுக்கும் யாழ்ப்பாணத்திலிருக்கும் தகப்பனுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் தான் அந்தக் காட்சி.

வெளிநாட்டில் இருக்கும் மகன், இந்தியப்படையின் இலங்கை வருகையுடன் நிலமை சீராகி விடுமோ என்று தான் பயப்படுவதாக கூறுகிறார். நாட்டில் நிலைமை சீராவதற்கும் மகன் பயப்படுவதற்கும் என்ன சம்பந்தம் என்று புரியாததால் தகப்பன் அவனிடம் கேட்கிறார். நாட்டில் நிலைமை சீராகிவிட்டதென்றால் தங்களைத் திருப்பி அனுப்பிவிடுவார்களே என்பதுதான் மகனின் பயம் என்று அவர் கூறுகிறார்.

பதிலுக்கு தகப்பன் சொல்கிறார். ஒன்றுக்கும் யோசிச்சு நீ கவலைப்படாதை நாங்கள் பிரச்சினை முடிய விடமாட்டம்.

இந்தக் காட்சி இப்போது ஞாபகத்துக்கு வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது.

இலங்கை அரசாங்கம் பிரச்சினையை தீர்க்கப் போவதில்லை அதைப் பேணவே விரும்புகிறது என்ற நிலைப்பாட்டை நான் சென்ற தடவை எழுதியபோது அதுபற்றி விமர்சித்த நண்பர் ஒருவர் எனக்கு கூறிய வார்த்தைகள் இவை.

"அரசாங்கம் என்ன, ஆருக்குத்தான் பிரச்சினை தீருறதிலை அக்கறை. தமிழ்க் கட்சிகளுக்கும் சரி புலிகளுக்கும் சரி பிரச்சினை தீருவதில் விருப்பம் இல்லை. இந்த இயக்கங்களுக்கு காசு அனுப்புற வெளிநாட்டு வாசிகளுக்கும் அது விருப்பமில்லை. கொஞ்சம் சண்டை ஓய்ந்து போய்வர முடியுமாய் இருந்தால் சரி. மற்றபடி நிலைமை இப்படி நீடிப்பதில் யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை !"

இவரது இந்த விமர்சனம் எனக்கு மேலே சொன்ன நாடகத்தின் காட்சியை நினைவுக்கு கொண்டு வந்தது. கூடவே ஒரு யாழ்ப்பாண வர்த்தகன் ஒருவன் ஒரு முறை "மனம்திறந்து" பேசியதும் ஞாபகம் வந்தது.

சண்டையாலை நிலைமை மோசம் எண்டு சொல்லுறது முழுக்க உண்மையில்லைப் பாருங்கோ. லொறி ஓட விட்டாணெண்டால் சண்டை இல்லாத காலத்தைவிட இருக்கிற காலத்தில் நல்லா உழைக்கலாம்.

ஆக நடக்கும் யுத்தத்தினால் அல்லல்படுபவர்கள் ஒருபுறம் அதனால் சந்தோசமடைகிறவர்கள் ஒருபுறம் என்று இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அல்லல் படுபவர்கள் கொழும்புக்கு கூட வரமுடியாத அப்பாவி மக்கள். சந்தோஷப்படுபவர்கள் கொழும்பிலும் வெளிநாட்டிலும் தொடர்பு வைத்திருப்பவர்கள்.

புலிகள் உட்பட இந்தத் தமிழ்க் கட்சிகள் இப்போது யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்ற ஒரு கேள்வியை எழுப்பிவிட்டு விடைதேட முற்படுவோமா ?



வேண்டாம் ஏன் வம்பு - எல்லோருமே அப்பாவி மக்களின் பக்கம் என்று கூறுவார்கள். பிறகு "ஆறாவது திருத்தச் சட்டத்தைப்பற்றி அக்கறைப்படாமல் பாராளுமன்றத்தில் இருப்பது யார் ? அவசரகால சட்ட நீடிப்பை ஆதரிப்பது யார் ? ஒற்றையாட்சியும் பாராளுமன்ற ஜனநாயகமும் தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்கும் என்பது யார் ? துப்பாக்கி முனையில் மக்களின் "ஆதரவை" கொண்டிருப்பது யார்? என்றெல்லாம் ஆராய வேண்டி வந்துவிடும்.

அது பிறகு சீல்வைக்கப்பட்ட "யுக்திய" சகோதரப் பத்திரிகையின் அச்சகத்துள் இருந்த இயந்திரங்கள் உடைந்து நொருங்கியது போல பல "அற்புதங்களுக்கு" வழிகோலிவிடும்.

ஜனாதிபதிக்கெதிராக கொண்டுவரப்பட்ட "ஒழுக்க வழுவுரை"ப் பிரேரணையை முதலில் ஏற்றுக்கொண்ட சபாநாயகர் பிறகு எப்படியோ ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்று அறிவித்துவிட்டார்.


சபாநாயகர் இப்படி மறுத்ததற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. பலலட்சக் கணக்கில் பணம் கைமாறியிருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. சபாநாயகர் எதிர்கட்சித் தலைவிக்கு நேர்ப்பேச்சில் தனக்கு பலமில்லியன் ரூபா லஞ்சம் தர நவலோக முதலாளி முயன்றதாக தெரிவித்துள்ளார் என்று அவர்கள் கூறுகிறார்கள். நவலோக முதலாளிக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள தனிப்பட்ட நெருக்கம் பகிரங்கமான ஒன்று. இதே நவலோக முதலாளி முதலில் காமினி திசாநாயக்கவை சமரசம் செய்யவும் முயன்றார் என்பது ஏற்கனவே வெளிவந்து விட்டது.

எப்படியோ, சபாநாயகரின் பரிசீலனையில் ஒழுக்கவழுவுரைப் பிரேரணையை தவிர்ந்த விடயங்களே அலசப்பட்டிருக்கின்றன. என்று தெரிகிறது.

ஏனென்றால், அவரது முடிவுக்கு ஆதாரமாக அவர் எந்தக் கையெழுத்துப் போட்ட நபர்களையும் ஆதரித்துப் பேசவில்லை. பேசாமலே கையெழுத்துகள் செல்லுபடியற்றவை என்று தீர்மானிக்க 116 பேர் கையெழுத்திட்டு வழங்கிய ஜனாதிபதிக்கு சார்பான மகஜர் போதுமானது என்றால் அதை உடனேயே அவர் செய்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யாமல் இப்படி நாள் தாமதித்து ஏன் என்ற கேள்வி எல்லோராலும் எழுப்பப் படுகிறது.

ஒழுக்கவழுவரைப் பிரேரணை கைச்சாத்திடப் பட்டதே சபாநாயகர் வீட்டில் வைத்து என்று சொல்கிறார்கள்.

ஆக இதில் தெளிவாவது எல்லோருடைய சக்தியையும் மீறிய அறிவுக்கப்பாற்பட்ட ஒன்று இங்கே புகுந்து விளையாடியிருக்கிறது என்பதே. அது பணமா (பாதாளம் பரை போகுமாமே?) அதிகாரமா என்பது புரிய வில்லை.



சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையீன விவாத வாக்கெடுப்பும் தோற்றுவிட்டது.

என்ன நடந்தது என்பதை விசாரிப்பதில், ஆராய்வதில் அர்த்தமில்லை. ஏனென்றால் இந்த பாராளுமன்ற அரசியல் வாதிகள் தம்மை மக்களின் தொண்டர்களாக கூறுவதெல்லாம் பச்சையான பொய் என்பதும், அவர்கள் மக்களின் பணத்தில் சவாரிவிடவே கஷ்டப்பட்டு இப் பதவிகட்கு வருகிறார்கள் என்பதும் அரசியல் என்பது மிகவும் உயர்ந்த வருமானமுள்ள தொழில் என்பதும் யாவரும் அறிந்ததே.

இவர்களது ஒழுக்கம் வித்தியாசமானது. அதை எமது அகராதியில், "வழுவொழுக்கம்" என்று சொல்லலாம். அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றும் உரை "வழுவொழுக்கவரை" யாகும். "வழுவொழுக்கத்தில்" வழு இருப்பதுபற்றி யாருக்கு அக்கறை ? அதில் பிழைப்பு நடாத்துபவர்களைத் தவிர ?

போகட்டும். இது நமது பிரச்சினை அல்ல. ஜனாதிபதி பிரேமதாச லலித் கோஷ்டியினரின் மோதலில் வெளிப்படையாக தெரிந்தது பச்சை இனவாதம் என்பதை யாரும் கவனித்ததாக தெரியவில்லை.

T.N.A. யை அழிக்க புலியை பயன்படுத்தியதாகவும், புலியை அழிக்க T.N.A. யினரை தற்போது பயன்படுத்துவதாகவும் அரசு அறிவித்ததையும் யாரும் கவனித்ததாக தெரியவில்லை. போகிற போக்கில் அண்மையில் அம்பலமாகிய இன்னொரு விடயத்தையும் சொல்லிவிடலாம்.

சுட்டுக் கொல்லப்பட்ட அமிர் யோகேசின் சடலங்கள் கொழும்பிலிருந்து திருமலைக்கு எடுத்து செல்லப்பட்ட விமானத்தில், புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கும்படி அங்குள்ள இராணுவதிகாரிகளுக்கு அனுப்பிய உத்தரவுக் கடிதமும் எடுத்துச் செல்லப்பட்டதாம்.

தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்துவதாக கூறும் கட்சிகள் இதுபற்றி ஒன்றும் கூறத் தேவையில்லையோ ...?

அல்லது இதுதான் அவர்களது "ஒழுக்கமோ?"

## ஒரு குறிப்பு...

ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி காலை பத்து மணிக்கு மருதானை டீன்ஸ் ரோட்டிலுள்ள சமூக சமய நடுநிலை மையத்தில் சரிநிகர் விமர்சனக் கூட்டம் நடைபெற்றது.

இந்த விமர்சனக் கூட்டத்திற்கு எல்லா தமிழர் அரசியல் கட்சிகளுக்கும், நபர்களுக்கும் சரிநிகர் அழைப்பு அனுப்பியிருந்தது. கூடவே "தங்களால் நேரடியாக வருகைதர இயலாவிடின் தங்களது அபிப்பிராயங்களை எழுத்து மூலம் அறிவித்தால் அவை கூட்டத்தில் வாசிக்கப் படும் என்ற அடிக் குறிப்புடன்"

ஒரேயொரு அரசியல் கட்சியினைத் தவிர வேறெந்தக் கட்சியினரும் வருகை தரவுமில்லை. அபிப்பிராயங்களை அனுப்பி வைக்கவுமில்லை என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். விமர்சனங்களையும், மாற்று அபிப்பிராயங்களையும் ஏற்றுக் கொள்கிற, அது பற்றி அக்கறை கொள்கிற பாரம்பரியத்தை மட்டுமல்ல, அவற்றை முன்வைக்கிற பாரம்பரியத்தைக் கூட குழிதோண்டிப் புதைத்து விட்டு வந்திருக்கிறது. தமிழர்களின் கடைசி பத்தாண்டுகால வரலாறு. இது துப்பாக்கிகளின் காலம். துர்ப்பாக்கியம், ஆரோக்கியமான விமர்சன அணுகுமுறைக்கும், அதுபற்றிச் சிந்திப்பவர்களுக்கும்.

மொத்தத்தில் சரிநிகர் இதுவரை வெளியான பத்து இதழ்களிலும் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு தொடர்பாக பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கிறது. இவை பற்றி ஆழமான விமர்சனங்களை எதிர் பார்த்திருந்தது. அவை பற்றிய ஆழமான பார்வை, வீச்சு கொண்ட விமர்சனங்கள் முன்வைக்கப்படாவிடினும், வருகை தந்திருந்தோரால் சரிநிகரில் வெளியான குறித்த சில கட்டுரைகள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

இவை குறித்துப் பதிலலித்துப் பேசிய ஆசிரியர் "சரிநிகர் எல்லா வகையான மாற்று அபிப்பிராயங்களையும் வரவேற்கிறது. பத்திரிகை தர்மத்தை பேணுகின்ற நாகரீகத்தைக் கொண்ட எல்லா வகையான அபிப்பிராயங்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்" எனது இன்றைய தேவை மாற்றபிப்பிராயங்களையும் விவாதங்களையும் ஊக்குவிப்பதே என்றார்.


நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணமாகும் காஷ்மீர்

முப்பதே வயதான ஃபைஸல் ரஃமானை இந்திய ராணுவத்தினர் தங்களுடைய விசாரணை நிலையத்துக்கு இழுத்துச் சென்றபோது தனக்கு இந்த அநியாயம் நடக்கும் என்று ஃபைஸல் ரஃமான் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்.

போராளி அமைப்பும் மனித உரிமை மீறல்களில் முதன்மை வகிக்கிறது. இயக்கத் தலைவரான ஷமாஸ் உல் பக், 2,500 இந்திய ராணுவத்தினரைத் தமது இயக்கம் கொன்றுள்ளதாகச் சொல்கிறார். ராணுவ ரீதியாகப் பலம் வாய்ந்த



காஷ்மீரில் இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டவர்களின் கல்லறை..

"காஷ்மீர் விடுதலைப் போராளிகளுக்கு உதவி வருகிறார்" என்ற குற்றச் சாட்டை மூன்றாவது முறையாகவும் மறுத்தார் ஃபைஸல். இந்திய-பாகிஸ்தான் எல்லைப்புறக் கிராமங்களி லொன்றான லைட் போரா வின் பள்ளிவாசலொன்றில் ஊழியராகக் கடமை புரிந்து வந்த ஃபைஸலை, மூன்று இந்திய ராணுவத்தினர் அமுத்திப் பிடிக்க நான்காவது ராணுவத்தான் நீண்ட ஒரு வாளால் அவருடைய இடது காலை வெட்டினான்.

"ஒரே வெட்டு ! ஆட்டுக் குட்டியின் தலையைப் போல இலகுவாய் என்னுடைய கால் துண்டாயிற்று" அப்படியே என்னைத் தூக்கி வெளியில் வீசினார்கள்."

சொல்கிற போதே கோபமும் வெறுப்பும் முகத்தில் ஏறுகிறது ஃபைஸலுக்கு.

இந்த மாதிரி எண்ணற்ற கொடூரக் கதைகளைச் சுமந்து கொண்டு பாகிஸ்தானின் எல்லைப் புறமும் வேறுபல இடங்க ளிலும் அகதிகளாக நிறையக் காஷ்மீர் மக்கள் இருக்கிறார்கள்.

இந்திய "சமாதானப்" படைக்குப் பழக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஃபைஸலுடைய அனுபவம் பெரிதாக ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாதுதான் எனினும் காஷ்மீரில் என்ன நடக்கிறது என்பதையே வெளியே தெரியவிடாமல் மூடி வைத்தி ருக்கிற இந்திய ஜனநாயகமும் பத்திரிகைகளும் ஃபைஸலைப் பற்றியும் அவரைப்போல ஆயிரக்கணக்கானோரைப் பற்றியும் நீண்டகாலத்துக்கு இந்திய மக்களுக்கு ஒளிக்க முடியாது.

சென்ற வருடம் இந்திய சமாதானப்படை திருகோண மலையிலிருந்து வெளியேறுகிற அன்று, திருமலைத்துறை முகவாசலில் ஒரு இந்திய ராணுவ உத்தியோகத்தரைப் பேட்டிகாண முடிந்தது.

"இலங்கையிலிருந்து நேரே காஷ்மீருக்கா போகிறீர்கள் ?" என்று கேட்டேன்.

அரைவாசிச் சிரிப்பும், அரைவாசி சீரியஸ்ஸுமாக "இருக்கலாம்" என்றார். அந்த உத்தியோகத்தரும் காஷ்மீரில் முஸ்லிம்களை கொன்று குவிக்கிறாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. அவருடைய இடத்தில், காஷ்மீரிலோ, அஸ்ஸாமிலோ, பஞ்சாபிலோ இலங்கையிலோ எந்த இந்திய அதிகாரி இருந்தாலும் அதைத்தான் செய்வார்.

இன்றைக்கு, காஷ்மீர் பள்ளத்தாக்கே எரிந்து கொண்டிருக்கிறது.

குனான் என்ற கிராமம் இந்திய - பாக்கிஸ்தான் யுத்த சூனிய வலயத்திலிருந்து இந்தியாவின் பக்கமாக மூன்று மைல் உள்ளே உள்ளது. இந்த வருடம் பெப்ரவரிமாதம் இருபத்திமூன்றாம் இருபத்து நான்காம் தேதிகளில் இந்திய ராணுவத்தின் ஆறாவது ராஜ்புத் ரைஃபிள்ஸ் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் கிராமத்தைச் சுற்றி வளைத்தார்கள். ஒரு பிரிவினர் எல்லா ஆண்களையும் கைது செய்து கொண்டு சென்று விட ஏனையோர் 10-60 வயதிற்குட்பட்ட அனைத்துப் பெண்களையும் மாறி மாறிப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தினார்கள்.



சிவா தெளதமன்

இத்தகைய நிகழ்ச்சிகள் காஷ்மீருக்குப் புதிதல்ல, இந்திய ராணுவத்திற்கும் கூடப் புதிதல்ல.

இந்த வருடம் மார்ச் 31ஆம் தேதி பாதிக்கப்பட்ட காஷ்மீரப் பெண்கள் வெளிப்படையாக இந்திய ராணுவத்தைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடுத்திருக் கிறார்கள்.

இந்திய அரசு "உத்தியோக பூர்வமாக" தெரிவிக்கும் தகவல்களின்படி 1800 பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளனர். எனினும் மனித உரிமைக் குழுக்கள் தெரிவிக்கிற தகவலின்படி கிட்டத்தட்ட 10000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தியப்படை மட்டுமல்ல, இஸ்லாமிய அடிப்படை வாதக் குழுவான ஹிஸ்புல் முஜாஹித்தீன் என்கிற ஹிஸ்புல் முஜாஹித்தீன் இயக்கமும் அதன் தலைமையின் கீழான "ஐக்கிய ஜிகாத் சபை"யும் பாகிஸ்தான் சார்பானவை.

சர்வதேச அனுதாபத்தை யும் ஆதரவையும் பெற்ற ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF) ஒன்றுதான் இந்திய, பாகிஸ்தான் தலைமீடற்ற சுதந்திரமான காஷ்மீர் அமைய வேண்டும் என்று கோருகிறது. காஷ்மீர் மக்களின் "சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை JKLF தான் ஆரம்பித்து வைத்தது. எனினும் போராட்டம் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கைப் பற்றப்பட்டு விட்டது" என்று சொல்கிறார் நீண்டகாலப் போராளியான ஒருவர்.

இஸ்லாமிய அடிப்படை வாத இயக்கங்களில் பாகிஸ்தானின் செல்வாக்கை விட ஆஃப்கானிஸ்தான் முஜாஹிதீன் கெரில்லாக்களின் செல்வாக்கே அதிகம் என்று தோன்றுகிறது. பாகிஸ்தானு டன் இணைவதற்காகத்தான் போராட்டம் என்று அடிப்படைவாதிகள் சொன் னாலும் பூகோள அரசியலை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். ஹிஸ்புல் முஜாஹிதீனுடைய பொதுச் செயலாளரான அப்துல் மஜீத் தார், மற்றும் இராணுவத் தளபதி "ஜெனரல் மூஸா" போன்றோர் இந்திய இராணுவத்தை வெல்ல முடியாது என்று கருது கிறார்கள். யுத்தம் என்பது இந்திய அரசைப் பேச்சுவார்த்தைக்கு வர வழைக்கும் தந்திரம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் JKLF, எச்சந்தர்ப்பத்திலும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமை விட்டுக் கொடுக்கப்பட முடியாது என்று கருதுகிறது.

(தகவல்களுக்கு ஆதாரம் : அம்னெஸீர் அறிக்கைகள் ; கார்டியன் வார இதழ்)

நன்றி - நூலகத்திட்டம்




# அரசியல் யாப்பை மாற்ற வேண்டுமென்பதே இப்போதைய பிரச்சினை!

-சார்ல்ஸ்-

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து பாராளுமன்ற முறையை மீண்டும் கொண்டு வருவது பற்றி ஒழுக்க வழுவுரைப் பிரேரணை கொண்டு வந்த குழுவினரும் அவர்களுக்கு ஆதரவளிப்போரும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் எல்லையற்ற அதிகாரம் குவிக்கப் பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமைகள், நிறைவேற்றதிகாரம் கொண்ட பாராளுமன்றம் ஒன்றிருந்தால் ஏற்படவழியில்லை என்பதே இவர்களது வாதம்.

இக்கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்வது எம்மைப் பொறுத்த வரையில் சிரமமாகவுள்ளது. முன்பு நீண்ட காலமாக பாராளுமன்ற முறையின் கீழ் வாழ்ந்த அனுபவம் எமக்கிருப்பதனாலேயே நாம் அவ்வாறு கூறுகிறோம். பாராளுமன்ற முறையின் கீழ் பிரதமர் பதவி வகித்தோர் அப்பதவியின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பொதுமக்களின் மனித, ஜனநாயக உரிமைகளை மதிக்காது தான்தோன்றி நிர்வாகம் நடத்திய கடந்த கால சந்தர்ப்பங்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. இது பற்றி கடந்த கால வரலாற்றிலிருந்தே தேவையான அளவு உதாரணங்கள் காட்ட முடியும். இதுபோல இன்றைய இனப்பிரச்சினையை உருவாக்குவதில் கடந்த 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களாக நடந்த பாராளுமன்ற ஆட்சி முறையும் போதியளவு பங்கெடுத்துள்ளதென்பதையும் நாம் மறந்துவிட முடியாது.



-சார்ல்ஸ் அபேசேகரா-
தலைவர் MIRJE.

இலங்கை பல்லினத்துவ பல்சமய நாடாகும். எனவே எமக்கு மதசார்பற்ற அரசொன்று தேவை. சிறுபான்மை மக்களின் அபிலாசைகளுக்கு அனுதாபம் காட்டக்கூடிய ஆட்சியொன்று எமக்குத்தேவை. எமது சமூகத்தின் பல்லினத்துவ உண்மையை ஏற்றுக் கொள்கின்ற இனங்கள் போலவே தனிமனிதர்களினதும் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக் கொள்கின்ற அரசியல் யாப்பொன்றையும் ஆட்சியமைப்பையும் உருவாக்க முடியுமானால் மட்டுமே இன்று உருவாகியுள்ள பிரச்சினைக்கு பதில் அளிக்க முடியம்.

எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறையா, பாராளுமன்ற முறையா என்ற குறுகிய விவாதத்தில் சிக்காமல் இன்று நிலவுகின்ற யதார்த்தத்தின்படி எத்தகைய ஆட்சியமைப்பு எமக்குத் தேவை என்ற பரந்த கேள்வியை நோக்கிக் கவனம் செலுத்த இன்றைய பிரச்சினை எமக்கு வழி செய்கிறது.

எமது கருத்துப்படி தேவையான அமைப்பின் முக்கிய உறுப்புகளில் இவையும் இடம்பெற வேண்டும். அரசு மதசார்பின்றியிருக்க வேண்டும். அமைப்பின் அடிநாதமாக இருக்க வேண்டியது அதிகாரம் குவிக்கப்படுவதல்ல. மாறாக அதிகாரம் மாகாணங்களுக்கோ, இனக்குழுமங்களின் அலகுகளுக்கோ பரவலாக்கப்பட வேண்டும் அப்போது இன்றுள்ள முறைபோலன்றி முடிந்தவரை பிராந்திய அலகுகளுக்கு அதிகாரம் முறைப்படி பகிர்வது அமைப்பின் முக்கிய அம்சமாகிறது. அவ்வாறு பகிரப்பட்ட அதிகாரத்தை "நிறைவேற்றுத் தலைமை" நினைத்தபடி மீண்டும் பறித்தெடுப்பதற்கு உள்ள வாய்ப்புக்களை ஒழிப்பதும் முக்கியமாகும். அதிகாரம் அதிகமாக மக்களை நிர்வாகத்தில் பங்காளர்களாக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கின்றன. "மக்கள் பங்கு பற்றும் ஜனநாயகத்துக்குத் தேவையான அமைப்பொன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் மாத்திரமே அரசு அதிகாரத்தை தான்தோன்றித் தனமாக பாவிப்பதை நிறுத்த கூடிய பலமுள்ள ஜனநாயக சமூகமொன்றுக்கு அடித்தளம் இட முடியும்.

ஜனநாயக உரிமைகள் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும். இன்றுள்ள அரசியல் யாப்பில் குறிப்பிடப் பட்டுள்ள மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுத்தலைவரால் தேவையானபோது பல்வேறு விதத்தில் கட்டுப்படுத்த வாய்ப்பு வழுங்கப்பட்டுள்ளது. ஆகவே புதிதாக அரசியல் யாப்பொன்று அமைக்கப் படுமாயின் அதில் உலக மனித உரிமைகள் பிரகடனத்தை எந்தமாற்றமுமின்றி எந்த கட்டுப்பாடுகளுக்கும் உட்படாத விதத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும். மனித, ஜனநாயக உரிமைகளுக்கு தெளிவான உத்தரவாதம் அளிக்கப் படுவதும் மிக அவசியம்.

அடுத்தது நிர்வாகம், சட்டம் ஆகிய துறைகளுக்கிடையில் ஒத்துழைப்பும், தலையீடும் முறைப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும். நிறைவேற்றதிகாரம் ஜனாதிபதியின் கையில் இருந்தாலும் பிரதமரின் கையில் இருந்தாலும் குறித்த நபரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் கட்டுப் படுத்தவும் தேவையான கருவி, யாப்புக்குள்ளேயே இருத்தல் வேண்டும்.

எல்லா இனக்குழுமங்களையும் கொண்ட பிரசைகளை உள்ளடக்கிய தனித் தொகுதியாக இலங்கையில் கணித்து செயல்படுகின்ற ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்வதன் மூலமாக அந்த நபர் சிறுபான்மையினரின் அபிலாசைகள் பற்றி அனுதாபப்படுவது கட்டாயப் படுத்தப்படுவதாக சிலர் வாதிக்கலாம்.

எது எப்படியிருப்பினும் இன்று நாட்டில் நிலவும் இனப் பிரச்சினை, ஜனநாயகப் பிரச்சினை ஆகியன தீர்க்கப்படுவதை இலட்சியமாகக் கொண்டு அரசியல் யாப்பைத் திருத்தியமைப்பதில் கவனம் செலுத்துகின்ற அனைவரும் மேலே நாம் காட்டியுள்ள விஷயங்களை சிந்தனைக்கு எடுத்துக் கொள்வார்களாயின் இரவு விழுந்த குழியில் பகலிலும் விழாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

சரிநிகர் சகோதரப் பத்திரிகையான "யுக்திய" செப்ரெம்பர் இதழிலிருந்து தமிழாக்கித் தருபவர் எம்.எச்.எம். ஷம்ஸ்.

# உண்மை எது?

ஈரோஸின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை பதவியேற்கவைக்கவென கொழும்பு வந்த எட்வேட் செபஸ்தியாம் பிள்ளையும் யாழ் மா.ந.ச. மூன்னாள் ஆணையாளர் சி.வி.கே. சிவஞானமும் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். வந்த வேலையைப் பாதியில் விட்டுவிட்டு, சத்தியப் பிரமாணம் செய்யாமலே.

"வந்தவேலை" யைப் பாதியில் என்று எழுதும்போது ஒரு கேள்வி எழுகிறது. வந்தவேலை உண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து எம்.பிப் பதவியைப் பெற்றுக் கொள்வது தானா ? அல்லது திருமலை வன்னி மாவட்ட எம்.பிக்களை போல யாழ்மாவட்டத்துக்கும் புதிய எம்.பிக்களை "ஈரோஸ்" (யாழ்ப்பாணத்திற்கு வெளியிலுள்ள சங்கர் ராஜியின்) பிரிவினர் நியமித்துவிடக் கூடாது என்பதற்காக அதை தடுப்பது தானா ..

எப்படியோ பாராளுமன்றம் திரும்பிய திருமலை வன்னி மாவட்ட ஈரோஸ் எம்பிக்கள் அவசரகால சட்ட நீடிப்புக்கு சார்பாக வாக்களித்ததும், எட்வேட் செபஸ்தியாம் பிள்ளை புலிகளால் சிறையிலிடப்பட்டுள்ளார் என்றதும், வந்திருக்கும் ஈரோஸின் யாழ் பிரிவினருக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை எனப் பகிரங்கமாக அறிவித்ததும் யாழ் ஈரோஸ் நிச்சயமாக வேறு என்பதை தெளிவாக்கியுள்ளது.



இப்போது இன்னும் சில கேள்விகள் எழுகின்றன.

1. புலிகளால், இடைக்கால அரசி( 1987 இல்) ன் ஆளுனர் பதவிக்காக கொடுக்கப்பட்ட பெயர்களில் இடம் பெற்று ஜே.ஆர். ஜெயவர்தனாவினால் தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் அவர்கள் (இவர் தெரிவைப் பின்னர் புலிகள் நிராகரித்தார்கள். சிலரைச் சுடும் முயற்சியும் நடந்தது !) எப்போது ஈரோசுக்கு மாறினார்.

2. "கையாலாகாத்தனம் காரணமாக" பாலகுமாரினால் கலைக்கப்பட்ட ஈரோஸ் எப்போது "கையாலாகும்ஈரோஸாக" மாறியது.

3. இங்குவந்த இந்த பிரமுகர்களுக்கு அவ்வளவு இலகுவில் செஞ்சிலுவை சங்க போக்குவரத்து (கப்பல்) வாய்ப்பு கிடைத்தது எப்படி ? இவர்கள் மண்மீட்பு நிதிக்காண 2 பவுண் கூட்டியிருந்தார்களா ?

4. வந்திருப்பவர்கள் புலிகளே என்று கூறி சிராவஸ்தியில் இவர்களுக்கு தங்க இடம் மறுக்கப்பட வேண்டும் என்ற பிற எம்.பிக்களின் கோரிக்கை தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்னவாக இருந்தது ?

5. T.N.A யை அழிக்க புலிகளைப் "பயன் படுத்திய" பாதுகாப்பு அமைச்சு இப்போது "கிளர்ச்சி அணியினரை" அடக்கவும் அவர்களை பயன்படுத்துதல் கூடுமா ?

போகட்டும் விடுங்கள். யார் யாரைப் பயன் படுத்துகிறார்கள் என்பது எல்லாம் வரலாற்றின் போக்கில் தெளிவாகிவிடும். ஆனால் பாராளு மன்றத்தில் கூடி தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கப் போவதாக கூறிய/கூறுகிற இந்த பாராளுமன்றக் கட்சிக்குள் சேர வந்திருக்கும் ஈரோஸின் (யாழ்) தலைவிதியை தீர்மானிப்பது நிச்சயமாகத் தமிழ் மக்களல்ல.

அது மிகவும் தெளிவான உண்மை.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒற்றையாட்சி உதவாது!

— சுனில்

கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தன புகழ் பெற்ற சிங்களப் பாடலாசிரியரும் கவிஞருமாவார். 'மாவத்த' என்ற கலை, கலாசார மும்மாத இதழை நீண்டகாலமாக வெளியிட்டு வருபவர். 'மாவத்த' இதழ் இலங்கை தமிழ் கவிதைகள் பற்றிய ஒரு சிறப்பிதழையும் சென்ற ஆண்டு வெளியிட்டிருந்தது. கலாநிதி சுனில், 'ராவய' எனும் சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகளை மொழி பெயர்த்துத் தருகிறோம்.

*நிறைவேற்று அதிகாரம் அனைத்தும் பொருந்திய ஜனாதிபதி ஆட்சி முறை மற்றும் பாராளுமன்ற முறை பற்றி:*

பழைய பாராளுமன்ற முறையானது, பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற கட்சி ஆட்சியை ஏற்கும் நோக்குடையது. இங்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கு இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்களவரை திருப்திப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. எனவே, பெரும்பான்மை வாக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் நடுநிலைமை பேணல் என்பது மறக்கப்பட்டு விடும். அதாவது, சிங்களவர் தவிர்ந்த ஏனைய இனத்துவக்குழுக்களுக்கு பாதகமானதும், பாரபட்சமானதுமான முன்னெடுப்புகளை கொண்டு வர வேண்டியதாயிருந்தது. இந்நிலைமையிலிருந்து மாறுபட்டு, இலங்கை மக்கள் அனைவரதும் பிரதிநிதியாக அதாவது, அனைத்து இனத்துவக்குழுக்கள் சார்பாகவும் ஜனாதிபதி அமைந்திருத்தல் என்ற கோட்பாட்டைக் கொண்டிருப்பதே சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி உருவாக்கத்தின் நோக்கமாக இருந்தது, என்று சொல்லப்படுகிறது.

கோட்பாட்டு அடிப்படையில் இந்நோக்கம் நல்லது போலத் தெரிந்தாலும் அது எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதிலேயே பிரச்சினை தங்கியுள்ளது. இப்போது ஆட்சியிலுள்ளோர் தமக்கிடையே பலமான அதிகார பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பது வெளிப்படை. தாம் தொடர்ந்து ஆட்சியில் நிலைத்திருப்பதற்கு தம்மிடையே கூட குறிப்பிட்ட அதிகார தந்திரோபாயங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்குள்ளது.

இந்நிலையிலிருக்கும் ஆட்சியாளர்கள் தமக்கிடையே அதிகார பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அதேவேளை தம்மை கட்டிக் காத்தலையும் மேற்கொள்ள எவ்வாறு ஜனாதிபதி ஆட்சிமுறையைப் பயன்படுத்தப் போகின்றார்கள் என்பது அடுத்த சுவாரசியமான கேள்வியாகும்.

இனவாதம், தமிழர் எதிர்ப்பு, பௌத்த சிங்கள வழிபாடு போன்ற நடவடிக்கைகளூடாக ஓர் சிங்கள பௌத்த மாயா விம்பத்தை ஏற்படுத்துவதே இங்கு நடைமுறையாயிற்று. இங்கு பௌத்த மதமும் பௌத்த தலைவர்களும் போற்றப்படும் அதேவேளை மறுபக்கத்தில் இனவாதம் வளர்க்கப்படுவதாகின்றது. உண்மையில் பௌத்த சிங்களத்தின் முதன்மையும் சிறுபான்மை இனத்துவக் குழுக்களுக்கெதிரான நடைமுறைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றன.

பண்டைய மன்னர் போன்ற ஓர் விம்பத்தை தனக்கு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி பிரேமதாசவின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. ஒரே "செங்கோலின்" கீழ் நாடு முழுவதையும் ஆட்சிக்குக் கொண்டுவருதல் என்பதே இங்கு முன்வைக்கப்படுவதனால், தனது செங்கோலுக்கு கட்டுப்படாத பிரதேசங்களையும் போரின் ஊடாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டிய தேவை அவருக்கு இருக்கின்றது.

*ஒற்றையாட்சி முறை பற்றி:*

ஒற்றையாட்சி என்ற கருதுகோள் சிங்களமக்களிடையே நிலைத்து இருப்பதால் பெரும்பான்மை இனத்துவ அரசியல் வாதிகள் அதை சீர்குலைக்க விரும்புவதில்லை. இதற்கு ஒத்து வராமல் ஈழப் போராட்டம் தொடர்வதால். அதற்கெதிராக போரும் தொடர்வதாயிற்று. ஒரு செங்கோலின் கீழ் விரிந்த, பரந்த ஆட்சியை விரும்பும் ஆட்சியாளர்களுக்கும் மதத்தலைவர்களுக்கும் இச் சூழல் சாதகமாகவே அமைகின்றது.


மக்களுக்கு இது எந்தளவு சாதகமாக அமையும் என்பதும், ஒற்றை ஆட்சியை நிறுவ போர் வழிமுறைகளைப் பாவிப்பதென்பதும் இங்கு எழும் பிரச்சினைகளாகும்.


*இன்றைய யுத்த நிலைமை பற்றி:*

இந்தபோர் சூழல் நிறுத்தப்பட அரசியல் தீர்வே தேவையானது. அதை ஏற்படுத்துவதற்கான சூழலை எமது அரசாங்கம் ஏற்படுத்துவதாக இல்லை. இந்நிலையில் தமிழ் பொது மக்களை கருத்திற் கொண்டால், L.T.T.E. அரசாங்கம் என இரு பக்கத்தாலும் தாக்கத்திற்குட்படுபவர்களாக அவர்கள் உள்ளனர்.

ஒற்றையாட்சியென்பதை நிலைநிறுத்த அரசு தொடரும் இப்போர் வெற்றி பெறுதலும் முழுநாட்டையும் ஆட்சியேற்பதும் எந்தளவு சாத்தியமாகும் என்பது இங்கு சிந்திக்கப்பட வேண்டியதாகும். பண்டைய ஆட்சியைப் பொறுத்த மட்டில், போரில் நாடு பிடித்தல் சாத்தியமாக இருந்திருக்கலாம். ஆனால் அன்றைய மக்களும் இன்றைய மக்களும் சமமானவர்கள் அல்ல. இன்று மக்களுக்கு ஜனநாயகம், மனித உரிமைகள் என்பனவெல்லாம் பரீட்சயப்பட்ட விடயங்கள், என்பதால் முன்பு போல் மக்களை இலகுவில் அடிமையாக்கிவிடவோ, 'பேய்க்காட்டவோ' முடியாது.

சாத்தியமான ஒரே வழிமுறை "பேசித் தீர்த்தல்" என்பதாகும். ஒற்றையாட்சியும் அதற்கான அரசியல் அமைப்பு என்பவை மாற்றியமைக்கப்பட வேண்டும். இதன் பின் எவ்வாறு ஐக்கியப்படலாம் என்பது பற்றி நாம் சிந்திக்கலாம்.





கலாநிதி. சுனில் விஜேசிறிவர்தன.

இன்று தொடர்ந்து இருக்கும் போரைப் பொறுத்தமட்டில், அரசு உடனடியாக போரை நிறுத்துவதன் மூலம் அடுத்த கட்டத்தை ஆரம்பிக்கலாம்.

போர் நிறுத்தப்படாத பட்சத்தில் L.T.T.E. சிங்கள பிரதேசங்களையும் கைப்பற்றிவிடும் என்ற அச்சம் சிங்களவர் மத்தியில் உள்ளது. இதற்கான ஒரு வழிமுறை, சிங்கள பிரதேச எல்லையும் தமிழ் பிரதேச எல்லையும் காக்கப்படுவதுடன் போரை நிறுத்திக் கொள்ளலாம். இதை ஈழம் கொடுத்தல் என்று விளங்கிக் கொண்டாலும் பிரச்சினை இல்லை, தனிநாடு பிரித்துக் கொடுப்பது என்பது ஒற்றை ஆட்சி அரசாங்கம் என்ற கருதுகோள் இல்லாது போனால் ஓர் கேள்வியாகவே எழாதெனலாம். நாடு பிரிந்தாலும் பொருளாதார ரீதியாகவும் ஏனைய தொடர்புகளுக்கும் இரண்டு பிரதேசங்களும் புரிந்து கொள்ளலுடனான தொடர்பை வைத்திருப்பதென்பது சாத்தியமானது என்பதும் தவிர்க்க இயலாததுமாகும். இதை இரு இன மக்களும் விளங்கியுள்ளனர் என்று கருதுகிறேன்.

*புலிகள் பற்றி.*

L.T.T.E. யின் அதிகார அடித்தளத்திற்கும் போர் முக்கியமானதாகும். போர் நிறுத்தப்படும் பட்சத்தில் அவர்கள் எவ்வாறு தாக்குப்பிடிப்பார்கள் என்பது சந்தேகமாகின்றது. போர் நிறுத்தப்பட்டு L.T.T.E. ஆட்சிப் பொறுப்பை தமது பிரதேசங்களில் ஏற்கும் போது, மக்கள் தமது உரிமைகள், ஜனநாயகம் என்பவை பற்றி கேள்வி எழுப்புவார்கள். அவை மறுக்கப்படும் போது எதிர்க்க முன்வருவார்கள்.

L.T.T.E. இந்த நிலையில் தொடர்ந்து மேலாதிக்கம் செய்ய முடியுமா என்பது கேள்வி. அவர்கள் இதே போக்கில் இயங்காது தம்மை மாற்றிக் கொள்வதன் மூலம் நிலை நிறுத்திக் கொள்வது சாத்தியப்படக்கூடும்.

நன்றி - நூலகத்திட்டம்




எப்போதோ படித்த அரபுக் கவிதை ஒன்று பின்வருமாறு கேட்டதாக ஞாபகம்.

இருண்ட காலங்களில்
பாடலும் கவிதையம் இருக்குமா ? "
பதிலும் கவிதையிலேயே வருகிறது.
"ஆம் இருண்ட காலங்களிலும்
பாடலும் கவிதையும் இருக்கும்
அவை
இருண்ட காலங்களைப் பற்றி இருக்கும்."

அண்மையில் "சரிநிகர்" அலுவலகத்துக்கு வந்திருந்த ஒரு இளம் கவியுடைய கவிதைகளைப் படிக்கிற போது இந்த அரபுக் கவிதை ஞாபகம் வந்தது. எண்பதுகளில் எதிர்ப்பிலக்கியமாக வெடித்த கவிதை தொன்னூறுகளில் மேலும் பரிணாமம் பெற்று ஆழமான மனித நேயத்தை வற்புறுத்துகிறது. மனித உறவுகள், உணர்வுகள் எவ்வளவு சிக்கல்களுக்கு மத்தியிலும் பேணப்படுகிறது, பேணப்படலாம் என்பது இன்றைய கவிதை சுதந்திரமாக விகசிக்கும் ஒரு அம்சம்.

"நட்சத்திரன் செவ்விந்தியன்" என்ற பெயரில் எழுதும் இளங்கவி ஒருவனின் கவிதை




## ஷெல் குத்துதல்

இரவில் தானே எல்லாம் களை கட்டுகிறது
இன்று பகலில்
ஷெல்பட்டிறந்த குடும்பத்தை
சவப்பெட்டிகளில் காவிச் சென்றோம்
எனக்கு அழுகை வரவில்லை

இரவில் தானே எல்லாம் கை கட்டுகிறது
மேசையில் இருந்தால் ஷெல் கூவும் பயம்
ஆண்டவரே !
இன்று தான் உம்மை வேண்டுகிறேன்
என்று தோப்புக் கரணம் போட்டேன்.
பாயில் கிடந்தேன் நித்திரை வரவில்லை.
எல்லா
இராக்கால நேரமும்
எழும்பி எழும்பி ஆண்டவரே என்று
தோப்புக் கரணம் போட்டேன்
வயல்வெளி முருகன் கோயிலுக்கு
50 சதம் நினைத்தேன்
போர்வையைப் போர்த்திக் கொண்டு
போர்வை இழுபட இழுபட
பயத்தோடு திரிந்தேன்
முற்றத்தில் வெகுநேரம்
ஒரு ஷெல் குத்தும் சத்தத்தை எதிர் பார்த்துக் கொண்டு
அலைந்தேன்

சிதறிப் போன அந்த உடல்கள் வந்து போகின்றன
மாலை முகம் கழுவும் போது
சவங்களின் விதைகளும் யோனிமடல்களும் ...
நள்ளிரவில் சவங்கள் என்முன்
எழுந்து நின்றன
கால்கள் இல்லாது குறியில் தாங்கி நடந்தன
தன் துயரத்தையும் வேதனையையும்
வாய்திறந்து காட்டியது.
ரத்தத்தைப் பற்றி நீ கனவு காண்கிறாய் ! என்றது
பகலுக்கு என்ன தெரியும்.

நட்சத்திரன் செவ்விந்தியன்



அரச தரப்பில் மனித உரிமைகள் மீறலுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் 1. ராணுவம் 2. பொலிஸ் 3. விசேட அதிரடிப் படை. இவர்களை விட கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் "இனந் தெரியாத குழுக்கள்" இயங்குகின்றன. இந்த "இனந் தெரியாத குழுக்கள்" அரச "கொலைக் குழுக்கள்" (Death squads) போன்றே இயங்குகின்றன.

முஸ்லிம் ஊர்காவல் படையும் புலிகளுக்கெதிரான பல தமிழ்க் குழுக்களும் ராணுவத்தோடு இயங்குகின்றன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) உறுப்பினர்கள் ஊர்காவற்றுறையில் இலங்கை ராணுவத்துடன் பணி புரிகிறார்கள். அத்துடன் கொழும்பில் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப் படுபவர்களை அடையாளம் கண்டு பாதுகாப்புப் படைகளிடம் ஒப்படைக்கின்றனர். மேலும், கொழும்பில் உள்ள சில அகதிகள் முகாம்களையும் உத்தியோக பூர்வமாகப் பொறுப் பெடுத்துள்ளனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் (PLOTE), வவுனியாவில் இயங்குகிறார்கள். மட்டக்களப்பிற்கு தமிழீழ விடுதலை இயக்கத்தினர் (TELO) அனுப்பப் பட்டிருக்கிறார்கள். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தந்த தகவலின்படி 112 தமிழீழ விடுதலை இயக்க (TELO) உறுப்பினர்களுக்கும், 146 தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOTE) உறுப்பினர் களுக்கும் அதேயளவு எண்ணிக்கையான EPDP உறுப்பினர்களுக்கும் ஆயுதம் வழங்கப் பட்டுள்ளது.

இவர்களனைவரும் ராணுவத்தின் நேரடி அதிகாரத்தின் கீழேயே பணிபுரிகிறார்கள் என்று மன்னிப்புச் சபைக்கு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### முஸ்லிம் ஊர்காவல் படை

சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் முஸ்லிம் ஊர்காவல் படைக்கு அரசு ஆயுதங்கள் வழங்கியது. இரண்டாயிரம் பேருக்கு ஆயுதங்கள் வழங்கப் பட்டன. வடக்கு கிழக்கு எல்லையோரப் பகுதிகளில் மொத்தம் 23,000 சிங்கள ஊர்காவல் படையினருக்கும் அரசு ஆயுதம் வழங்கியுள்ளது. "பொது மக்களுக்கு ஆயுதம் வழங்குவது" என்ற அரசின் கொள்கை கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இனக் குழுமங்களுக்கிடையே வன்முறையையும் கசப்பையும் அதிகரித்து விட்டுள்ளது.


பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைத்து வரும் முஸ்லிம்கள் தமிழர்களின் விபரப் பட்டியலை படையினருக்கு வழங்குவதாகவும் இந்தப் பட்டியல்களிலிருந்தே பயங்கரவாத சந்தேக நபர்களின் தெரிவு இடம் பெறுவதாகவும் சொல்லப்படுகிறது. இந்தப் பட்டியல்களில் தமிழ் அரசாங்க ஊழியர்களும், ஏனைய படித்த தமிழர்களும் இருந்தனர். உள்ளூர்ச் சண்டைகளின் விளைவான கோபதாபங்களே இத்தகைய பட்டியல்களின் பின்னணி என்று நம்பப்படுகிறது.

தமிழர்களைத் தடுத்து வைத்துப் பின்னர் பொலிசிடம் கையளிக்கும் வேலையையும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் செய்துள்ளனர்.

வீரமுனை
திருநாவு
இலங்கே
நான்கு
திருக்கோ
ளுடைய
பார்க்கக்
ருக்கும்
ஊர்காவ
தடுத்து
பொலிச
பட்டனர்
அவர்கள
என்றும்
விசாரிப்
பிரயோ
என்றும்
சென்றவ
பட்டது.
ஆட்கள்
விட்டார்
பொதுவ
படுத்துச

பொ
கலாநிதி
இவ்வாறே
போயுள்
160 த
தாக வி
(STF)
சொன்
பட்டபே
அவர்களு
தெரிவிச்

இந்த
மாதம்
வாழைச்
களப்பு
கொண்ட
பயணிக
முஸ்லிம்
படையின
தாக்கின
கொல்ல
காணவி
பெப்ரவ
ஹுஸை
இரண்டு



நன்றி - நூலகத்திட்டம்



சேர்ந்த
ரவி, ராசன்,
ன் ஆகிய
ஆசிரியர்கள்
யுள்ள தங்க
குடும்பங்களைப்
ன்று கொண்டி
ாது முஸ்லிம்
படையால்
வைக்கப்பட்டு
ஒப்படைக்கப்
சப்ரம்பர் 1990)
ல்வரும் "புலிகள்"
ர்களைப் பற்றி
தில் எவ்வித
மில்லை
தேடிச்
க்குச் சொல்லப்
கைய பதில்கள்
கொல்லப்பட்டு
என்பதையே
அர்த்தப்

லைச் சேர்ந்த
என்பவரும்
காணாமல்
பொத்துவிலில்
ளைக் கொன்ற
அதிரடிப்படை
திசு ஒருவர்
தெரிவிக்கப்
கலாநிதி
ருவரா என்பது
வில்லை.

டம் பெப்ரவரி
காழும்பிலிருந்து
யூடாக மட்டக்
க்கிச் சென்று
தமிழ்ப்
பஸ் ஒன்றை
ஊர்காவல்
ஏறாவூரருகில்
ழு பயணிகள்
னர். பலரைக்
இச்சம்பவம்
ாதம் ஸதாம்
கிராமத்தில்
முஸ்லிம்களை

# amnesty international

சர்வதேச மன்னிப்புச் சபை செப்ரம்பர் 1991 இல் வெளியிட்ட அறிக்கையிலிருந்து சில பகுதிகளைத் தமிழில் தருகிறோம். இலங்கை வடக்குக் கிழக்கு ஆயுத முரண்பாட்டின் சூழலில் மனித உரிமை மீறல்கள் என்ற தலைப்பிடப்பட்ட 44 பக்க அறிக்கை பாரபட்சமின்றி இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் அரசுடன் இணைந்து வேலைசெய்யும் தமிழ்க் குழுக்கள் முஸ்லிம் ஊர்காவற்படை அனைத்தினதும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துகிறது.



களுவாஞ்சிக்குடியில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட மனித உடல்கள்.

விடுதலைப் புலிகள் கொன்றமைக்குப் "பழிக்குப்பழி" என்று தெரியவருகிறது

## மாயமாய் மறையும் மனிதர்

ஜுன் 1990 இலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட 3,000 தமிழர்கள் "காணாமல்" போய் விட்டார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. இதைத் தவிர ஒக்டோபர் 1990 அளவில் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 3,000 தமிழர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டோ காணாமல் போயோ உள்ளனர். வவுனியா, மன்னார், ஊர்காவற்றுறை பகுதிகளிலிருந்தும் "காணாமல் போனவர்" விபரம் மன்னிப்புச் சபைக்குக் கிடைத்துள்ளது. பாதுகாப்புப் படையினரால் கொண்டு செல்லப்படுவோர், சுட்டோ, வெட்டியோ அல்லது எரித்தோ கொல்லப் படுகிறார்கள். இவ்வருடம் பெப்ரவரி மாதம் விஜயபாகு படைப்பிரிவின் 45 ராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் கொண்டச்சியில் கொல்லப்பட்டனர். பதிலடியாக, நாலு ஆசிரியர்களை பாடசாலை விட்டு வரும் வழியில் ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இதுபோன்றே மார்ச் 1991 இல் மட்டக்களப்பு, இருதயபுரத்தில் பழிக்குப் பழியாக 11 பேர் பொலிசாரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

## தலையற்ற உடல்கள்

கறுப்பு நாகம்(Black Cobras) என்று கூறப்பட்ட ஒரு குழுவால் மட்டக்களப்பில் கொல்லப்பட்ட தலைவெட்டிக் கொலைகளைப் பற்றி மன்னிப்புச் சபைக்கு பாதுகாப்பு அமைச்சு தகவல் தருகையில் இந்தக் கொலைகளுக்கு புலிகளுக்கு விரோதமான ஒரு இயக்கமே

காரணம் என்று அறிவித்துள்ளது. ஜனாதிபதி பிரேமதாச நேரடியாகத் தலையிட்ட பிற்பாடுதான் இத்தகைய கொலைகள் மட்டக்களப்பில் நின்று விட்டன என்று அறிகிறோம்.

## புலியெடுத்த பலிகள்

இந்திய அமைதி காக்கும் படை வெளியேறுகிற காலத்திலிருந்து மறுபடி இலங்கை ராணுவத்துடன் மோதல் ஆரம்பமாகும் வரை கண்மூடித்தனமான கைது, தடுத்து வைத்தல், சித்திரவதை கொலைகள் என்பவற்றில் புலிகள் ஈடுபட்டு வந்துள்ளனர். பணத்திற்காக முஸ்லிம் வர்த்தகர்களுட்பட பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

துணுக்காயிலுள்ள புலிகளின் சிறைச்சாலை பற்றிய தகவல்களையும் மன்னிப்புச் சபை அங்கிருந்து விடுதலை பெற்று வந்தவர்களிடம் இருந்து பெற்றுள்ளது. நவம்பர் 1990 இல் 28 முஸ்லிம் வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர். ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மூவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களுள் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களிலிருந்தோரை விட புலிகளின் கட்டளைகளுக்குப் பணியாதோரும் அடங்குவர்.

## துணுக்காய்ச் சிறை

சர்வதேச மன்னிப்புச் சபை இந்த வருடம் ஜூன் மாதம் துணுக்காய்ச் சிறையில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட ஒருவரைச் சந்தித்தது. ஏப்ரல் மாதம் 1990 ஆம் ஆண்டு மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்கள் மதில் பாய்ந்து சென்று அவரைக் கண்களைக் கட்டி அழைத்துச் சென்றார்கள். ஒன்பது நாட்கள் வேறும் 40-45 பேருடன் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஒன்பதாம் நாள் துணுக்காய்க்கு அனுப்பப் பட்டார். துணுக்காய்ச் சிறை நெல் சந்தைப்படுத்தும் சபையின் கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய கட்டிடத்தில் 3 அடி X 2 அடி அளவுள்ள இடம் நிலத்தில் பெட்டி போல வரையப்பட்டிருந்தது. ஒவ்வொரு கைதிக்கும் ஒவ்வொரு "பெட்டி" இலக்கமிடப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தச் சிறு துண்டு இடத்திலேயே கைதிகள் நிற்பாட்டப் பட்டிருந்தார்கள். ஒன்பது அங்குல இரும்புத் துண்டங்களால் அனைவரது கால்களும் விலங்கிடப் பட்டிருந்தன. பெரிய கட்டிடத்துள் கிட்டத்தட்ட 800 பேர் இவ்வாறு சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்.

"பயங்கரக்" கைதிகளை தனியாக வைத்திருந்தார்கள். இந்தத் தனிச் சிறை என்பது எட்டடி ஆழக் குழிகளாகும் குழிகளை மூடி முட்கம்பி வலை. இவ்வாறு எட்டு நீள் குழிகள் இருந்தன. ஒவ்வொரு குழியிலும் கிட்டத்தட்ட 20-25 "பயங்கரக்" கைதிகள் இருந்தார்கள்.

புலிகளின் கச்சாய்த் தடுப்பு முகாமில் தான் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டேன் என்பதையும் அவர் விவரித்தார். அவரும் வேறு நான்கு கைதிகளும் சிறு அறையொன்றில் சுவரைப் பார்த்தபடி நிற்கப் பணிக்கப் பட்டார்கள். பின்னர் பெரிய சுத்தியல் ஒன்றினால் எல்லோரும் தாக்கப் பட்டார்கள். தான் ஏழு முறை தாக்கப்பட்டதாகவும் அதன் விளைவாக இன்று வரை சுவாசிப்பதில் கஷ்டம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த 16 பேரைக் கச்சாய் முகாமில் தலைகீழாகத் கட்டித் தொங்கவிட்டு நகங்களுக்கிடையே ஊசி ஏற்றியதைத் தான் கண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பின்னர் இந்த ராணுவத்தினருக்கு சேறும் சகதியும் வாய்க்குள் ஊட்டப்பட்டு, அறையொன்றில் அடைக்கப் பட்டு மிளகாய் எரித்த புகை அறைக்குட் செலுத்தப்பட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



# பாராளுமன்றமா? ஜனாதிபதியா?

சிவமூர்த்தி

"காணாமல் போன ஜனநாயகம்" என்பது சரிநிகர் பத்தாவது இதழில் ஆசிரியர் தலையங்கம். ஜனநாயகம் இருந்தால்தானே காணாமல் போவதற்கு ? என்பது எனது நண்பர் ஒருவரின் வாதம். இதை நோக்கும் போது நம்நாட்டின் ஆட்சி முறை பற்றியும் அதன் ஆட்சிமன்றுபற்றியும் பரவலாக எழுந்துள்ள அச்சம் புலனாகிறது.

அரச அதிருப்தியாளர்களினாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களினாலும் கைச்சாத்திடப்பட்டு 28/8/91 அன்று திகதியிடப்பட்ட ஜனாதிபதி மீதான ஒழுக்கவழுவுரைக் கடிதம் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டமை யாவரும் அறிந்த விடயமமே.

இதுபற்றி அரசுபக்கமும், எதிர்க்கட்சிகள் பக்கமும் பல வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றன. அரசின் சார்பில் சட்டமா அதிபர் ஒழுக்கவழுவுரைப் பிரேரணை செல்லுபடியற்றது என அறிவித்தார். எனினும் இதனை தெட்டத்தெளிவாக மறுத்த சபாநாயகர் ஜனாதிபதிக்கு 13.9.91, 18.9.91 எனத் திகதியிடப்பட்ட இரு கடிதங்களை அனுப்பி வைத்தார். அதில் "பாராளுமன்றத்துக்கு காவலன் ஆகிய யான், சட்டமா அதிபருக்கோ, அல்லது சபையின் வெளியிலிருக்கும் எந்த சபைக்கோ கட்டுப்பட்டவன் அல்ல" எனக் குறிப்பிட்டதோடு "70 வது சரத்தின் சகல நிபந்தனைகளுக்கும் அமைய சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பிரேரணை 24ம் திகதி கூடவுள்ள கூட்டத்தொடரில் சந்தேகத்துக்கு இடமின்றி முன்வைக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

எனவே சபாநாயகரின் அறிவிப்பினால் பிரமையூட்டப்பட்ட ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட பலரும் பிரேரணை வாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நம்பினர்.

பாராளுமன்ற ஒத்திவைப்பு, சபாநாயகரின் வைத்தியசாலைப் பிரவேசம், இந்திய உத்தியோகபூர்வ சுற்றுலா, என்பனவற்றின் பின், கூட்டப்பட்ட பாராளுமன்ற கூட்டத் தொடரில் ஏனோ திடீர் மனமாற்றம் ஏற்பட்டு பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

பிரேரணையின் நிராகரிப்புக்கான காரணம் கையெழுத்துக்களின் செல்லுபடியாகாத்தன்மை எனக் கூறப்பட்டது. எனினும் யார் யாருடைய கையெழுத்துகள் செல்லுபடியற்றவை, ஏன் செல்லுபடியற்றதாகின என விளக்கம் அளிக்கப்படவில்லை. அத்துடன் கையெழுத்திட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எந்தவிதமான ஆலோசனைகளும் நடாத்தப்படவில்லை, என்பது குறிப்பிடத்தக்கது.

வெறுமனே தம்மால் வைக்கப்பட்ட ஒப்பங்களை வாபஸ் பெற்றுக்கொள்கிறோம் என கடிதங்கள் எழுதினால் மட்டும் போதுமா? அவ்வாறாயின் இந்நாட்டில், எம்மால் வைக்கப்பட்ட ஒப்பங்களை நாம் தேவைக்கேற்றபோது வாபஸ் பெற முடியுமா ? அவ்வாறாயின் ஒப்பமென்பது அவசியமற்ற சமாச்சாரம் ஆகிவிட்டதா ? என்ற கேள்விகள் பொதுப்படையாக எழுவது சகஜமே.

எனவேதான் ஒருவரினால் வைக்கப்பட்ட கையெழுத்துக்கள் (ஒப்பங்கள்) எவ்வெவ் நிலைகளில் செல்லுபடியற்றவை என நாம் ஆராய்தல் வேண்டும். பொதுவாக சுயமாகச் சிந்திக்கும் இயல்பற்றவர்கள், சித்த சுவாதீனம் அற்றவர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டவர்கள், சிறுவர்கள் முதலியோரால் வைக்கப்பட்ட ஒப்பங்கள் நிராகரிக்கப் படுவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. அல்லது நிறைமதுபோதையில் உள்ளவர்களாக இருந்திருக்க வேண்டும். இதில் எந்த ரகத்தைச் சார்ந்தவர்களை நம் பாராளுமன்றம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பது புரியவில்லை. எனினும் இன்றைய உலக நாடுகளின் ஆட்சி பரிபாலனங்களில் இவை காலத்துக்குக் காலம் இடம்பெறும் சாதாரண விடயங்கள் ஆகிவிட்டன என்பது மட்டுமே உண்மை.

ஏனெனில் அரசாங்கத்தின் பிரதான துறைகளாகிய சட்ட, நிர்வாகத்துறைகளின் தெரிவு, அதிகாரம் என்பன யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பாகவும் இன்றைய ஆட்சிமுறைகள் பிரதானமாக மூவகைப் படுத்தப்படுகின்றன.

1) பாராளுமன்ற நிர்வாக முறைமை
2) ஜனாதிபதித்துவ நிர்வாக முறைமை அல்லது தலைவர் நிர்வாக முறைமை
3) பாராளுமன்ற முறை. ஜனாதிபதித்துவ முறைமை.


இலங்கையைப் பொறுத்தவரை தற்போது நடைமுறையிலுள்ள ஆட்சி முறைமை பாராளுமன்றம் சார்ந்த ஜனாதிபதி ஆட்சிமுறை ஆகும். இங்கு நாட்டின் பிரதம நிர்வாகியாகிய ஜனாதிபதி சட்டத்துறைக்கு புறம்பாக நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுகிறார். இவரே தனது நிர்வாகத்தைக் கொண்டு நடாத்த சட்டத் துறையிலிருந்து அமைச்சர்களைத் தெரிவு செய்கின்றார். எனவே நாட்டில் நிர்வாக பொறுப்பு அமைச்சரவையிடமும், ஜனாதிபதியிடமும் ஒப்படைக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகும் போது அவ்வாட்சி யாப்பு மூலமான சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும் என்பது பல அறிஞர்களின் கருத்து. இவரது பதவிக்காலம் முடியும்வரை பாராளுமன்றமோ அல்லது மக்களோ அவரைத் திரப்பி அழைக்க முடியாது. மேலும் பெரும்பான்மையின மக்கள் வாழும் நாட்டில் பெரும்பான்மைப் பிரதிநிதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றீட்ட முடியும். அவ்வாறே பாராளுமன்ற ஆட்சிமுறையும், அமைச்சரவையின் சர்வதிகார ஆட்சிமுறை என வர்ணிக்கப்படுகின்றது. இங்கும் பெரும்பான்மை இனத்தைப் பிரதிபலிக்கும் கட்சிகளே ஆட்சி அமைக்கும் வல்லமையைப் பெற்றிருக்க முடியும்.

இவ்வகையில் பல்லினத்துவ சமூக அமைப்பினைக் கொண்ட நாடுகளில் பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை அடக்குவதை நியாயப்படுத்தும் சட்ட பூர்வமான ஆட்சி மன்றங்களாகவே பாராளுமன்றங்கள் விளங்குகின்றன.

பல இனமக்கள் வாழும் இலங்கையில் இரு பேரினவாதக் கட்சிகளே மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றன. ஒருபலமான எதிர்க்கட்சியாகக் கூட வரும் நிலைமை சிறுபான்மைக் கட்சிகளுக்குக் கிடையாது. விதிவிலக்காக 1978 பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சியின் படு தோல்வியால் கூட்டணி எதிர்க்கட்சியாகியது. ஆனால் பாராளுமன்றத்தில் ஒரு துரும்பைக்கூட நகர்த்தும் வல்லமையைக் கூட அது பெற்றிருக்கவில்லை என்பது நோக்கற்பாலது

மேலும் இவ் ஆட்சிமுறை நிலவும் நாடுகளில் சம்பிரதாயத்துக்கும், மதிப்புள்ள பொருட்களுக்கும், பணத்துக்கும் (100 அல்லது 200 காசுக்கு) வாக்குகள் விலை போவது இயல்பாகி விட்டது.



நன்றி: யுக்தி

அத்துடன் பாராளுமன்ற ஆட்சி நிலவும் நாடுகளில் சட்ட மூலங்கள், பிரேரணைகள் விவாதத்துக்கு எடுக்கப்படும் போது பிரதிநிதிகள் கடத்தப்படுவதும், பல லட்சம் கோடி பணத்துக்கு அவர்கள் விலை போவதும் அவர்களே பணம் படைத்தவர்களுக்கு சார்பாகத் தாளம் போடுவதும் இயல்பாக உள்ளன.

சென்ற சரிநிகர் இதழில் 1948 ல் இருந்து 78 வரை நிலவிய பாராளுமன்ற ஆட்சி முறையில் நாடு எதிர்நோக்கிய அல்லல்களை குறிப்பாக சிறுபான்மைத் தேசிய இனமக்கள் எதிர்நோக்கிய அல்லல்களும், பெரும்பான்மை தேசிய இனம் அனுபவித்த பாதுகாப்பற்ற உணர்வையும் விளக்கி உள்ளதை இங்கு குறிப்பிட வேண்டும்.

இவ்வாறே 78ன் பிற்பகுதியிலிருந்து இன்று வரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறையில் நாட்டுமக்கள் அளப்பரிய இன்னல்களை அனுபவித்து வருவதை நாம் அறிவோம்.

83 ன் மிகப் பெரிய இனக் கலவரமும் 86ன் பின் தென் பகுதியில் 60,000 இளைஞர், யுவதிகள் காணாமல் போனதும், பாராளுமன்றம் கைப்பொம்மையாக இருப்பதும் இவ்ஜனாதிபதி ஆட்சி முறையிலேயே ஆகும்.

இது பல்லினத்துவ சமூகங்களைக் கொண்ட நாடுகளில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையோ அன்றி, பாராளுமன்ற ஆட்சி முறையோ நடைமுறையில் பொருந்தாத ஆட்சிமுறைகள் என்பதை தெளிவாக்குகிறது. சமஷ்டி ஆட்சி அமைப்பை உடைய இந்தியாவில் கூட பாராளுமன்ற ஆட்சிமுறை தோல்வியைத் தழுவி உள்ளதைக் காண முடிகின்றது.

பாராளுமன்றமும், ஜனாதிபதியும் எப்படி சட்டத்தாலும் பணத்தாலும் பிறவற்றாலும் மக்களது விருப்பங்களுக்கு நேர் விரோதமான முறையில் பாதுகாக்கப்படலாம் என்பதற்கு எமது நாட்டின் சமீபகால நிகழ்ச்சிகள் நல்ல உதாரணங்களாகும். இவையெல்லாம் தெளிவாக்குவது இப்போது நடப்பிலுள்ள பாராளுமன்றமும், ஜனாதிபதி முறையும் மக்களது ஆட்சியின் கருவிகள் அல்ல என்பதையே அப்படி அவை மக்களின் அதிகாரத்தின் கருவிகள் என்று (அரசியல் வாதிகளால் வாயளவில்) சொல்லப்படுவது உண்மையானால் இந்த முறைமையைக் குறித்து கேள்வி கேட்பதற்கும், விமர்சிப்பதற்கும், பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதியை மீள அழைப்பதற்கும் மக்களுக்கு அதிகாரம் உரிமை வேண்டும். பிரதிநிதிகளை சட்டமன்றுக்கு தெரிவு செய்வதற்கு எவ்வாறு மக்களுக்கு உரிமை இருக்கின்றதோ அவ்வாறு திருப்பி அழைப்பதற்கும் உரிமை இருத்தல் வேண்டும். ஆனால் அது ஒருபோதும் மக்களிடம் இருந்ததில்லை.

மேலும் ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கேற்ப பிரதம நிர்வாகி மீதோ, பாராளுமன்றத்தின் மீதோ அல்லது சபாநாயகர் மீதோ ஒழுக்கவழுவுரைப்பு உட்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் போது தாமாகவே ராஜினாமாச் செய்வதன் மூலமோ அல்லது பதவி விலகுவதன் மூலமோ மீண்டும் தேர்தலை நடத்துவதன் மூலமோ தமது உண்மை நிலையினை ஒரு நபர் சிலவேளை வெளிப்படுத்த தயாராகலாம். ஆனால் அப்போதும் ஜனநாயகத்திற்கு பாதுகாப்பு வந்து விட்டதாக நாம் சந்தோசப்பட்டு விட முடியாது. தனி நபர்களின் நல்லொழுக்கத்திலும் கண்ணியத்திலும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப்பட அனுமதிப்பது மிகவும் ஆபத்தானதாகும்.

ஒரு தனி நபருடைய குணநலனல்ல, மக்களுக்கு அதிகார ரீதியான பாதுகாப்பே அவசியமானது. இந்தச் சபைகள் பணம்படைத்தவர்களினதும் நாட்டைக் சூறையாடுபவர்களதும் நலன்களுக்காக வக்காலத்து வாங்கவும் பொதுமக்களது நலனுக்கு விரோதமான முடிவுகளை அவர்களின் பெயரால் எடுக்கவும், நாட்டை அந்நிய வங்கிகட்கும் நாடுகட்கும் ஈடுவைப்பதில் மக்களைப் பங்காளிகளாக்கவுமே பயன்படுகின்றன. உண்மையில் சொல்வதானால், மக்களின் பிரதிநிதி தெரிவு கூட ஒரு ஏமாற்று சூது நாடகமாகவே நடந்து வருகிறது. மக்களது உரிமைகளைப் பறிக்கவும் அவர்களது சுதந்திரத்தை நசுக்கவுமே இவை பணியாற்றி வருகின்றன. இது அண்மைக்கால சம்பவங்களால் மேலும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இன்றைய இந்த சீரழிந்து போன ஜனாதிபதித்துவ ஆட்சி முறைமை, பாராளுமன்ற ஆட்சிமுறை ஆகிய இரு வழிகளையும் தூக்கி எறிந்து நம் நாட்டின் அரசியல் சமூக, பொருளாதார நிலைகளுக்கு ஏற்ற, மக்களின் வாழ்வு முறைக்கேற்ற அவர்களின் சுதந்திரமான காத்திர வாழ்வுக்கு ஏற்ற மூன்றாவது வழியினை அதாவது ஆட்சி முறைமையினை அறிமுகப் படுத்துதல் வேண்டும். அப்போதுதான் பெரும் பான்மையினருக்கு ஆயினும், சிறுபான்மையினருக்காயினும் உண்மையான சுதந்திர வாழ்வு மலரும். மக்களுக்கு அதிகாரம் கிடைக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மணலாறு: மற்றொரு அம்பாறை!

வெலி ஓயா இன்னொரு அம்பாறை மாவட்டம். முல்லைத்தீவு மாவட்டத்தின் தெற்கிலுள்ள கொக்குத் தொடுவாயிலிருந்து திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலுள்ள புல்மோட்டை திரியாய் வரையிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தையும் அக்கரைப் பகுதியிலிருந்து பதவியா வரையிலுள்ள ஒரு பெரும் நிலப்பரப்பையும் உள்ளடக்கியதே இன்று துரிதமாக உருவாக்கப்பட்டு வரும் வெலிஓயா - வகல்கட மாவட்டமாகும். இம்மாவட்டம் அரசினால் ஒரு நிர்வாக மாவட்டமாக வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப் படாவிடினும் நடைமுறையில் அது ஒரு தனி நிர்வாகப்பிரிவாகவே செயல் படுகிறது. ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இது வெலிஓயா - வகல்கட மாவட்டம் எனவே குறிப்பிடப்படுகிறது. தமிழர் அரசியல் ரீதியாக பலமற்றுப் போகிற ஒரு காலகட்டத்தில், இந்தியாவும் எவ்வித எதிர்ப்பும் காட்ட விரும்பாத ஒரு நிலையில், இது அதிகார பூர்வமாக அம்பாறையைப் போன்ற ஒரு பாரிய சிங்களக் குடியேற்ற மாவட்டமாக வரையறுக்கப்படவுள்ளது.

வேவ, 1, 11 சிங்கபுர, கிரி இப்பங்கல (பால் ஆமைக்கல்) ஆகிய பல கிராமங்களும் துரிதமாக முல்லை மாவட்டத்தினுள் வளர்ச்சி யடைந்து வருகின்றன. வெலிஓயா - வகல்கட பிராந்தியத்தின் முல்லை, திருமலை மாவட்டங்களை உள்ளடக்கும் பகுதி ஒரு இராணுவ பாதுகாப்பு வலயமாக உள்ளது. இராணுவ தடை முகாமூடாகவே அதனுள் பதவியாவினூடாக வரும் குடியேற்ற வாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வலயத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒரு இராணுவ முகாமையோ, அல்லது காவல் அரணையோ கொண்டுள்ளது. இவ் வலயத்தினுள் மகாவலித் திட்டத்தின் L வலய செயலகம் அமைந்துள்ளது. இம்மகாவலி செயலகத்தி னூடாகவும் குடியேற்றத்திற் கான உதவிகள் வழங்கப் பட்டதாகத் தெரிகிறது. முல்லை மாவட்டத்தினுள் அமைகின்ற இக்குடியேற்ற விரிவாக்கத்தினை பலப் படுத்தவும், துரிதப்படுத்தவும் என ஒரு பாரிய மின் இணைப்புத் திட்டம் அண்மையில் பூர்த்தியாகி யுள்ளது. அத்துடன் அனுராத புரம் பதவியா, வெலிஓயா நடைபெறும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கை களிலும் இராணுவமும் சர்வோதயமும் இணைந்தே செயல்படுகின்றன. அண்மை யில் ஜனாதிபதி பிரேமதாசா பதவியா - சிறிபுர பகுதிக்குச் சென்ற போது யான் ஓயா ஆற்றை மறித்து அணைகட்டி விவசாய அபிவிருத்திக்கு உதவுவதாக வாக்களித் துள்ளார். உண்மையில் இவ்வணைத்திட்டம் வவுனியா மாவட்டத்தினுள்ளும் சிங்களக் குடியேற்ற விவசாயத்தை வெலிஓயாவிலிருந்து விரி வாக்க உதவும். இதற்கான ஆதார வேலைகள் வவுனியா மாவட்டத்துள் தொடங்கப் பட்டுவிட்டன. இப்பிராந்தி யத்தின் அபிவிருத்தி வேலைகளை உற்றுநோக்கும் பொழுது ஒரு விடயம் வெள்ளிடை மலைபோற் புலனாகிறது. அதாவது இவ்வேலைகள் நிறைவுறும் போது வெலிஓயா - வகல்கடை என பெயர் சூட்டப்பட்ட இப்பிராந்தியம்

வட மத்திய மாகாணத்தின் பின்னிப் பிணைந்த ஒரு அங்கமாகவே இருக்கும். அது வட கிழக்கோடு எவ்வித நிர்வாக, வர்த்தக, விவசாய தொடர்புமற்ற ஒரு பகுதியாக காலப்போக்கில் பலப் படுத்துவதே அங்கு இன்று நடைபெறும் நெடுஞ்சாலை

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகள் துண்டிக்கப்பட்டு வெலி ஓயா பிராந்தியத்தோடு இணைக்கப் பட்டுள்ளன. வெடிவச்சகல், பட்டிக்குடியிருப்பு ஆகிய வவுனியாவின் எல்லைப்புறக் கிராமங்களும், நெடுங் கேணியின் தெற்காகவும் தென்கிழக்காகவும் உள்ள கிராமங்களும், திருகோண மலையின் வடக்கே உள்ள தென்னமரவாடி, திரியாய் ஆகிய கிராமங்களும் இதனுள் அடங்கும். இத்தமிழ்க் கிராமங்கள் பலவற்றில் இருந்து மக்கள் 1984 இன் ஆரம்பம் தொடக்கம், இராணுவத்தால் வெளியேற்றப் பட்டது தெரிந்ததே. இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் வெலிஓயா திட்டத்தைச் சேர்ந்த 18 சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. நெடுங்கேணி - ஒதியமலை பாதையில் உள்ள சிலோன் தியேட்டர்ஸ் பண்ணை கஜபாபுர என்றும், கென்ற் பண்ணை கல்யானபுர 1, கல்யான புர 11 என்றும், காகோ போட், (Cargoe Boat farm) அகட்டுகஸ்வேவா என்றும், முந்திரியங்குளம் ஜானகபுர எனவும் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. நிக்க

ஆகியவற்றினூடாக செல்லும் ஒரு பாரிய நெடுஞ் சாலைக்கான வேலை களும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. ஊவா மாகாணத்தி லிருந்து அம் பாறை வரை அமைக்கப்பட்ட நெடுஞ் சாலைகள் எங்ஙனம் அம்மாவட்டம் மிகத் துரிதமாக ஒரு சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக உருவாக்க உதவின என்பது இவ்விடம் நினைவு கூரற்பாலது. வெலிஓயாவின் முல்லைத்தீவு, மாவட்டத்தில்

உள்ள பாதுகாப்பு வலயக் குடியேற்றவாசிகளுக்கு மாதாந் தபடியாகப் பணமும் உலர் உணவுப் பொருட்களும் வ ழங்கப்படுகின்றது. கல் வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. பாட சாலை, மருத்துவ வசதிகள் மற்றும் சன சமூக நிலைய வசதிகள் ஆகியன சர்வோதய நிறுவனத்தினாலும் ரவி ஜெயவர்த்தனாவின் மகன் ஆரம்பித்த சமூக சேவை நிறுவனத்தினாலும் செய்து கொடுக்கப்படுகின்றன. வெலி ஓயாக் குடியேற்றம் 84 இல் துரிதப்படுத்தப்பட்ட போது ரவி ஜெயவர்த்தனாவின் அனுசரணையுடன் சர்வோதய நிறுவனம் இக்குடியேற்ற விரிவாக்கலுக்கு மிகப் பெரிய பங்காற்றியுள்ளது. இன்றும் வெலிஓயா பகுதியில்

அமைப்பு, வீட்டுத்திட்ட அமைப்பு, மின் இணைப்பு, வடிகால் மற்றும் நீர்ப்பாசனத்திட்ட அமு லாக்கல் ஆகியவற்றின் நோக்கமாகும். இன்றும் இனி என்றும் இலங்கை இராணுவம் இப்பிராந்தியத்தை இம்மி யளவும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்ப தற்கான எந்த ஒரு திட்டமும் இராணுவத்தின் உடன்பாடு இல்லாமல் நடைமுறைப்படுத்த அரசு தயாராகவில்லை. எனவே சிறுபான்மை இனத்தை கைக்குள் போட வேண்டிய தேவை காரணமாகவும், சர்வதேச ரீதியாக நல்லெண்ணத்தைப் பெறுமுகமாகவும் பேச்சு வார்த்தைகளில் ஆர்வங் காட்டுவதாக அரசாங்கம் நடந்து கொள்ளலாமே ஒழிய, காத்திரமான, தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்வை அதனால் முன் வைக்க முடியாது.

- பிரம்மா -

# கடவுள் காப்பாற்ற.......

"வடக்கு கிழக்கில் யுத்தம் விரைவில் முடியவேண்டும் என்பதே எனது பிரார்த்தனை" பிரார்த்தனை என்றதும் உங்களுக்கு அமைச்சர் தொண்டமான் ஞாபகம் வரக்கூடும். ஆனால் இதைச் சொல்வது அவரல்ல. இலங்கை "சனநாயக சோசலிச குடியரசின்" ஜனாதிபதி அவர்கள். பனாகொடை முகாமில் நடைபெற்ற இராணுவத்தினருக்கான நீச்சல்குளக் கட்டிடத் தொகுதி திறப்பு விழாவில் அவர் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இலங்கையின் ஜனாதிபதி - இலங்கையின் அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தைக் கையில் வைத்தபடியே பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசும் ஜனாதிபதி, இலங்கை முப்படைகளிலும் பிரதம தளபதியான ஜனாதிபதி, யுத்தத்தை நிறுத்த பிரார்த்தனை நடத்தவேண்டி இருப்பது மிகவும் வேதனைக்குறிய ஒன்றாகும்.

ரூபவாஹினியைப் போடுகிற போதெல்லாம் பௌத்த கோவில்களில் ஜனாதிபதி வழிபடும் காட்சியைக் காண்கிறோம். அப்போதெல்லாம் ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு ஒவ்வொருநாளும் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் இருக்கின்ற பௌத்த கோவில்களுக்கெல்லாம் போய் வணங்க நேரம் கிடைப்பது எப்படி என்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கும்.

இப்போது தான் தெரிகிறது, அவரது வழிபாட்டு யாத்திரை கூட தேசத்தின் பிரச்சினை ஒன்றை தீர்ப்பதற்கான ஒரு உத்தியோகபூர்வ செயலே என்பது. இன்னும் புரியாதது ஒன்று இருக்கிறது. அதுதான் ஜனாதிபதிக்கு உத்தரவிட மட்டும் தான் முடியும். அதன் விளைவுகளை கட்டுப்படுத்த முடியாது. அதற்குப் பிரார்த்தனை செய்வது தான் ஒரே வழி என்பதைப்பற்றி ஏன் யாரும் கொஞ்சம் கூட அக்கறைப்படவில்லை.

வடக்கு கிழக்குக்கு தான் போன போதெல்லாம் இராணுவத்தினர் தமது பங்கீட்டு உணவுகளையும் மக்களுக்கு வழங்கி மக்களுக்கு சேவை செய்வதை கேள்விப்பட்டதாகவும் ஜனாதிபதி இக்கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்.

ஜனாதிபதி எப்போது வடக்குக்குப் போனார் என்பது உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ரூபவாஹினிக் காரர்களுக்கு சொல்லாமல் சிலவேளை அவர் போய்வந்திருக்கக் கூடும்.

ஆனால் இராணுவத்தினர் உணவு வழங்கியது உங்களுக்கு நம்பமுடியாத ஒன்றாக இருக்கும். ரூபவாஹினிக்கும் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கும், லங்காபுவத்துக்கும் இது தெரியாமல் இருந்தது மிகப் பெரிய ஆச்சரியம் தான்.

எப்படியோ, இராணுவத்தினர் வடக்கு கிழக்கில் செய்யும் யுத்தத்தை நிறுத்த பிரார்த்தனை தான் ஒரே வழி என்று புரிந்துவிட்டது. அவரே செய்கிற பிரார்த்தனையை, அமைச்சர் தொண்டமானும் நமது வீரகேசரியும் விரிவாக செய்ய ஒழுங்கு படுத்துவார்கள். அதன் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவார்கள் என எதிர்பார்ப்போம். இப்போது கூட்டணி தலைவர்களிலொருவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சொன்னது எவ்வளவு உண்மை என்று புரிகிறது. அவர் உண்மையில் ஒரு தீர்க்கதரிசிதான். அவர் 20 வருடங்களுக்கு முன்பே சொன்னது இதுதான். "தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேணும்"

# பதக்கங்களும் பயங்கரமும்

ஒக்டோபர் மாதம் பத்தாம் திகதி, வடக்குக் கிழக்கு யுத்தத்தில் வீர, தீர, சூரச் செயல்கள் புரிந்த 613 படையினருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. கடற்படையினருக்கு 8 பதக்கங்களும், விமானப்படைக்கு 12 பதக்கங்களும் ராணுவத்தினர்க்கு 593 பதக்கங்களும் வழங்க ஜனாதிபதி மூன்றரை மணிநேரம் "கால்கடுக்க" மேடைமேல் நிற்க வேண்டியதாயிற்று.

பதக்கங்கள் வழங்கப்பட்ட பிற்பாடு, முப்படையினுள்ளும் "அவர்களுக்குக் கூட, எங்களுக்குக் குறைய என்று முணு முணுப்புகள் ஆரம்பமாகி விட்டனவாம். கஜபா படைப்பிரிவுக்கு 310 பதக்கங்கள் வழங்கப்பட்ட அதேசமயம் பிரிகேடியர் விஜய விமலரத்தினவால் தோற்றுவிக்கப்பட்ட RDF பிரிவிற்கு ஒரு பதக்கமும் வழங்கப்படவில்லை என்று சிலர் குறைப்படுகிறார்கள். இராணுவத்தில் "மாவீரர்களை" எப்படித் தெரிவு செய்கிறார்களென்று தெரியவில்லை (எவ்வளவு அதிகமாகக் கொல்கிறார்களோ அவ்வளவு அதிகமாகப் பதக்கங்களாக்கும்.)

இந்த அமளிக்குள் ஆனந்தாக் கல்லூரிப் பழைய மாணவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒரு "முற்போக்கான" காரியம் செய்து விட்டார்கள். சென்ற மாதம் 18 ஆம் திகதி தர்மசிறி பண்டாரநாயக்கா எனும் சிறந்த நெறியாளரின் "வெள்ளைப் பயங்கரம்" (தவள பீஷண) என்ற நாடகத்தை மேடையேற்றி இராணுவத்தளபதி ஹமில்டன் வணசிங்காவையும், அவயவங்களை "ஜொனி" வெடிகளுக்கு பறிகொடுத்த இருநூறு இராணுவத்தின ரையும் பார்க்க அழைத்திருந்தினர்.

நாடகம், ஜீன் போல் சார்த்தரின் Men without shadow எனும் புகழ்பெற்ற பிரஞ்சு நாடகத்தின் தழுவல். இராணுவப் பயங்கரங்களை பற்றி மட்டுமல்லாமல் சித்திரவதைகளையும், சமூகம் ராணுவ மயமாக்கப்படுவதும் பற்றியது.

வடக்கு கிழக்கு யுத்தத்திற்குப் போவதற்கு முன்னால் இந்த ராணுவத்தினருக்கு இந்த நாடகத்தைப் போட்டிருக்கலாமே என்று அங்கலாய்க்கிறார் நண்பர் ஒருவர். Too late the Hero ? அல்லது Better late than never ?

நன்றி - நூலகத்திட்டம்



# விஜேசோமா என்கிற கேலிச் சித்திரகாரர்






உபாலி நிறுவனத்தின் பத்திரிகைகளான தி ஐலண்ட், திவயின ஆகியவற்றின் "ஆஸ்தான"க் கேலிச் சித்திரக்காரர் விஜேசோமாவின் கேலிச் சித்திரங்களின் கண்காட்சி ஒன்று பண்டாரநாயக்கா மண்டபத்தில் ஒக்ரோபர் மாதம் நடைபெற்றது. சராசரி சிங்கள மனோபாவம் எப்படி இருக்கிறதென்பதற்கும் எப்படித் தொழிற்படுகின்றதென்பதற்கும் தெளிவான உதாரணம் விஜேசோமாவின் கேலிச் சித்திரங்கள்

ரசிக்கத் தகுந்த, சுவையான, சிரிப்பு மூட்டுகிற கேலிச் சித்திரங்கள் பல விஜேசோமாவிடமிருந்து கிடைத்திருக்கின்றன. எனினும் விஜேசோமாவின் கேலிச் சித்திரங்களை தொடர்ந்து அவதானித்து வரும் கூரிய சிந்தனை, நேரிய பார்வை இரண்டும் உடையோருக்கு முக்கியமாகத் தட்டுப்படுகிற ஒரு அம்சம் விஜேசோமா நிறுவனமயப்பட்டுப்போன சிங்கள பௌத்த கருத்தியலையும் சிங்கள பௌத்த அரசையுமே மிகப் பெருமளவுக்குப் பிரதிபலிக்கிறார்



DON'T ROCK THE BOAT, THONDA!

என்பதும் சுதந்திரப் பார்வை, சுதந்திர வீச்சு எனுமிரண்டும் பரிதாபத்திற்குரிய வகையில் மிகக் குறைவாகவே அவரிடம் காணப்படுகிறது என்பது மாகும்.




சித்திரங்களின் நேர்த்தியையும், நுட்பமான கலையம்சங்களையும் விட்டு விடுவோம். கேலிச் சித்திரங்களுக்கு சுவை இரண்டாம் பட்சமாகவே இருக்கட்டும். ஆனால் பக்கம் சாராத, "நேர் கொண்ட பார்வை"யை ஒரு நல்ல அரசியல் கேலிச் சித்திரக்காரர் என்று புகழப்படுகிற ஒருவரிடம் எதிர்பார்ப்பது நியாயம் தானே.

துரதிர்ஷ்டம், இலங்கையின் பெரும் பத்திரிகைத்துறையில் குறிப்பாக சிங்கள, ஆங்கில மொழிகளில் நீங்கள் நேர் கொண்ட பார்வையை எதிர்பார்க்கக் கூடாது.

நூற்றெண்பத்திரண்டு பக்கங்கள் கொண்ட விஜேசோமாவின் கேலிச் சித்தரப் புத்தகத்தில் "குறியீடுகளும் சுருக்க விளக்கங்களும்" (Symbols and abbreviations) என்ற தலைப்பில் ஒரு பக்கம் உள்ளது. அதில் "பொட்டு" வைத்த ஒரு புலித் தலையை வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதிகள் என்பதன் குறியீடாகத் தருகிறார்.

ஜே. வி. பி. வன் முறைக்கும், அரச பயங்கரவாதத்திற்கும் என்ன ஜயா குறியீடு திரு விஜேசோமா அவர்களே ?

எதிர்க்கட்சிகளையும் "பயங்கரவாதிகளையும்" சிறுபான்மை மக்களின் ஆரசியல் வாதிகளையும் "தாக்குவதில்" விஜேசோமா காட்டுகிற ஆர்வம் ஆளுங்கட்சியை விமர்சிப்பதில் இல்லாமல் இருப்பது விசனத்துக் குரியதாகும்.




இனத்துவக் குழுக்களைப் பொதுமைப் படுத்திக் காட்டும் விஜேசோமாவின் குறியீடு (ethnic stereotyping) பச்சை இனவாதத்துக்கு ஒரு மாற்றுத்தான் குறைந்தது. தமிழர்களுக்குப் பொட்டு, முஸ்லிம்களுக்குத் தொப்பி, சிங்களவர்களுக்கு எந்த விதமான குறியீடும் இல்லை. எல்லாத் தமிழ் அரசியல் வாதிகளும் நெற்றியில் பொட்டு வைத்திருக்கிறார்களா என்ன ?


விஜேசோமாவின் சராசரிச் சிங்களவரைக் குறிக்கும் பாத்திரமான புஞ்சி சிங்ஹோவுக்கு ஏன் குடுமி இல்லை ? ஏன் தலையில் சீப்பு இல்லை ? இவையிரண்டும் "சிங்கள" குறியீடு அல்லவா ? என்று நாங்கள் எதிர்க் கேள்வி கேட்க முடியும் ?

மலையக மக்கள் பிரச்சினை பற்றி வருகிறபோது இந்தக் கேலிச் சித்திரகாரருக்கும் இனவாதத்திற்கும் வித்தியாசம் இல்லை. கீழேயுள்ள தொண்டமான் கேலிச் சித்திரத்தைப் பாருங்கள்.

அவருடைய புத்தகத்தில் உள்ள நூற்று எண்பத்திரண்டு கேலிச் சித்திரங்களில் அரசியல் நடுநிலைமை பேணுகிற ஒரேயொரு கேலிச்சித்திரம் தான் தேறுகிறது !

இனக் குழுமங்களைப் பொதுப்படுத்தி குறியீடாகக் காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் கேலிச் சித்திரகாரருக்கு ஏற்படத்தான் செய்யும். என்றாலும் மிகவும் அவதானத்துடனும் பொறுப் புணர்வுடனும் செய்யப்பட வேண்டியது அது. அந்தப் பொறுப்புணர்வு விஜேசோமாவிடம் இல்லை.

# விக்ஸ் என்கிற...



வே. விக்னமூர்த்தி.

இருக்கின்ற சில மனிதர்களையும் இழந்து கொண்டேயிருக்கிற நம் தேசம் இந்த மனிதனையும் ஏன் இழந்தது ?

விடை காண முடியா வினாவாய் இது நீள்கிறது.

கண்டி திரித்துவக் கல்லூரியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வந்த "விக்ஸ்" என அன்பாக அழைக்கப்பட்ட வேதநாயகம் விக்னமூர்த்தியை அன்மையில் மகாவலியில் இழந்து போனோம்.

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட விக்னமூர்த்தி 1986 இல் பிரபல ஓவியர் "மார்க்கு" வின் மாணவராக நவீன ஓவியத்துறையில் பயிற்சி பெற்றார். 1987 இல் கண்டி திரித்துவக் கல்லூரியில் அதே துறையில் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

ஆசிரிய தொழிலை மேற்கொண்ட பின்னர் எதிலும் போல அதிலும் மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தனக்குப் பரிச்சமான பாடங்களை இலவசமாக நடாத்தி வந்தார்.

ஆசிரிய தொழிலில் நியமனம் பெற்ற சிறிது காலத்திலேயே மாணவர் களிடையே மட்டுமன்றி பல்லின மொழி வேறுபாடுகளுடைய சூழலில் எவரும் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் நிறைந்த, நெருங்கிய, நிசமான உறவுகளை திரட்டிக் கொள்ள இந்த மௌனியால் எப்படி முடிந்தது ? அவரது படைப்புக்கள் போன்றே பேசிய சில வார்த்தைகளும் நேரிய சிந்தனையுடனும் கலப்பற்றவையாகவும் இருந்ததனாலா ? என்று ஆச்சரியப் படாமலிருக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான "உள்ளம்" சஞ்சிகையின் ஆக்கத்திலும் பங்காற்றியிருந்த விக்ஸ் தேடலுக்கு முக்கியத்துவமளித்து சமூகப் பிரச்சினைகளை ஓவியங்களாக சிருஷ்டித்தது மட்டுமன்றி தான் கொண்ட கொள்கைக்காக சில



வருடங்களை சிறையிலும் கழித்தவர்.

நேரிய சிந்தனையும் எளிமையான வாழ்க்கையையும் கொண்ட ஒரு உண்மை கலைஞராக வாழ்ந்தவர் இவர்.

உண்மைகளை துப்பாக்கிகள் துரத்துகிற காலம் இது !

மகாவலிக்கும் உண்மைகளைப் பலியெடுக்கும் கலாசாரம் தொற்றிக் கொண்டு விட்டதோ ?

-ரீஷி-

## பத்துமாதங்கள் பத்து நாட்கள்

பத்து மாதங்கள் பத்து நாட்கள்
நகரட்டும்
நான் மீண்டும் பிறப்பேன் அம்மா,
என் சிற்றன்னையின் வீட்டில்.
என்னை உன்னால்
அடையாளம் கண்டு பிடிக்க முடியாவிடில்
அம்மா,
என் கழுத்தில் இருந்த தூக்குக்கயிற்றின்
அடையாளத்தைத் தேடு.

1905 இல் வங்கப் புரட்சியாளர் குதிராம் போஸ் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்ட போது பெயர் தெரியாத கிராமியப் பாடகரொருவர் இயற்றிய பாடல். குதிராம் போஸே பாடுவது போல அது இயற்றப்பட்டுள்ளது.

நன்றி: மூன்றாம் உலகக் கவிதைகள்

நன்றி - நூலகத்திட்டம்



# முகவரி தொலைந்து போன முகங்கள்

ஒரு நாடகம் மேடையேற்றப்படுவது பலரது கூட்டு முயற்சியில் தான் சாத்தியம். கூட்டு முயற்சி ஒன்றுக்கு புரிந்துணர்வும், விட்டுக் கொடுக்கும் பண்பும் இன்றியமையாதன.

இந்த அடிப்படையில் மொழி, மத, கலாசார அடிப்படைகளால் பிரிக்கப் பட்டு, வளர்க்கப்பட்ட இனக் குழுமங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்று கூடி, மும்மொழி நாடகம் ஒன்றை மேடையேற்றுவது என்பது, கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது மட்டுமல்லாமல் வரவேற்கதக்கதுமாகும்.


மும்மொழித் தயாரிப்புகள், எப்பொழுது தோற்றம் பெற்றது என்பது தெரியாவிடினும், இவ் வருடத்தின் முற்பகுதியில் அவுஸ்திரேலியத் திரைப்பட நெறியாளர் "கிரிஸ்" என்பவரால் நெறிப்படுத்தப் பட்ட "நாங்கள் எக்க ஃபமிலி" என்ற மும்மொழி நாடகம் கண்டி திரித்துவக் கல்லூரியில் மூன்று முறை மேடையேற்றப்பட்டு, பலரது வரவேற்பையும் பெற்றது.

மிகப் பெரிய மும்மொழித் தயாரிப்பான "ஒபேரா வொன்யோன்சி" சோமலதா சுபசிங்கவினால் நெறிப் படுத்தப்பட்டு, கொழும்பு பல்கலைக்கழக நாடக மன்றத்தினால் தயாரிக்கப் பட்டு, இரு மாதங்களுக்கு முன்பு மேடையேற்றப் பட்டபோது, பார்வையாளர் களின் அமோக வரவேற்பை பெற்றது. இது மீண்டும் அடுத்த வருடம் மேடையேற்றப்படவுள்ளது.

ஒபேரா வொன்யொன்சி நோபல் பரிசுபெற்ற ஆபிரிக்க எழுத்தாளர் வோலே ஸோயின்காவின் நாடகமாகும்.

இதேபோல், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர் காமினி ஹத்தெட்டுவேகமவினால் "ச்சா, ச்சா, ச்சா" எனும் மும்மொழி நாடகம் தயாரித்து மேடையேற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த வரிசையில் கடந்த ஐப்பசி 12ம் திகதி பிரித்தானிய நிலையத்தில், கொழும்பு பல்கலைக்கழக நீதிபீட மாணவன் விஜித்சிங்கினால் நெறிப்படுத்தப்பட்டு, பல்கலைக்கழக மாணவர்களால் நடிக்கப்பட்ட மும்மொழி, நாடகமான "முகவரி தொலைந்து போன முகங்கள்" கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.





இந்த நாடகம் முதலில் தமிழில் மேடையேற்றப்பட்டது. அரசியல் கருத்துக்களால் ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக சில மாணவர்கள், விரிவுரையாளர்களின் உதவி யுடனும் ஒத்துழைப்புடனும் பின்னர் மும்மொழி நாடக மாக மேடையேற்றப்பட்டது.

இன்று எம் போன்ற மக்களைப் பயப்படுத்துவதும், கேள்விக்குள்ளாக்குவதும், அநியாயமான, நீதியற்ற முறையற்ற அகால மரணங்கள் "மரணமே உனக்கொரு மரணம் வராதா" என்று கேட்பதன் மூலம், இந் நாடகம் மக்கள் மீதான தன் பரந்த பார்வையை வெளிக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாமல் மரணத்தின் மீதான தன் வெறுப்பையும், சுட்டிக் காட்டுகிறது.

இந்த நாடகத்தின் வசனங்கள் சிறுபான்மைத் தேசிய இனத்தின் சமகாலப் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வந்தாலும், இதன் பிரதான போக்கும், குறியீடுகளும் உலக மக்கள் இன்று எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகளின் தன்மையை வெளிக் காட்டுகின்றது.

அவையாவன, மக்களும், சட்டங்களும், மக்களும் மனித குணங்களும், மக்களும் பணவசதிபடைத்த தனியாரும் என்ற பிரதானமான மூன்று அம்சங்களாகும்

கலை, கலைக்காகவா ? அல்லது மக்களுக்காகவா ? கலை மரபுரீதியான சட்ட வரையறைகளுக்கு கட்டுப்பட வேண்டுமா ? போன்ற கேள்விகளையும் இந்த நாடகம் எழுப்பியது.

கலை, கலாசாரங்கள் என்பவை மக்களின் வாழ்வில் பிரிக்கப்படமுடியாத ஒரு பகுதி. மக்கள் கூட்டங்கள் அல்லது குழுக்கள் தங்களுக்கம் தங்கள் தேவைகளுக்கும் ஏற்ப அதன் தனித்துவங்களை காலத்திற்கு காலம் தீர்மானிக்கின்றனர். மாற்றுகின்றனர், புடமிடு கின்றனர். இது முன்னேற்ற மான வளர்ச்சிப் போக்கே என்பதற்கு வரலாற்று சான்று கள் ஏராளமாக உள்ளன. அதனால் இப்போக்கை வரட்டுத் தத்துவார்த்த, சட்ட வரையறைக்கு உட்படுத்தி கட்டிப்போட முடியாது.

மேடையில் நடிக்கப்படும் ஒரு காட்சியின் மூலம் எதைச் சொல்ல வருகின்றனர், என்பதைப் பற்றி சிந்திப்பதை மறந்து இப்படி நடிக்க லாமா ? இல்லையா என்று விவாதிப்பது மரபுக்குத் கீழ்ப்படிவான கட்டுப் பெட்டித்தனமாகும்.

இந் நாடகத்தின் முதல் காட்சியில் நடிகர்கள் தம் பின்புறங்களை பார்வையாளர் களுக்கு காட்டிக் கொண்டு தாம் நடிக்கப்போகும் நாடகத்தைப்பற்றி ஆராய்ந்து கொண்டு இருப்பார்கள் இதில் நடிகர்கள் பின்புறங்களை காட்டுவது எதிர்க்கப்பட்டது நாடகங்களில் இப்படிக் காட்டப்படுவதில்லை என்றும் கூறப்பட்டது இச் சந்தர்ப்பத்தில் நாம் சிந்திக்க வேண்டியது, இப்படி நடிக்கலாமா ? இல்லையா ? என்பதல்ல ஏன் இப்படி நடிக்கின்றனர் ? என்பதுதான். இதற்கான பதில் " முகவரி தொலைந்து போன முகங்கள் என்ற தலைப்பிலேயே இருக்கிறது இக்காட்சி எங்களின் இன்றைய நிலையின் பிரதிவிம்பமாக எமக்கு கண், காது, வாய் இருந்தும் உண்மைகளை பார்க்கவோ, கேட்கவோ, பேசவோ முடியாதுள்ளது. நாம் முகம் இல்லாத முண்டங்கள். அதில் நடித்த நடிகர்களும் முண்டங்களே என்றால் மிகையல்ல.

"ஒரு தத்துக்கிளி வந்தது. விருந்தினர் ஒருவர் வருவார் எனக் காத்திருந்தேன். ஒரு மரணம் வரும் என எதிர்பார்க்கவே இல்லை" என்ற வசனத்தில் தத்துக்கிளி தமிழர் கலாசாரக் குறியீடு இது சிங்களவர்களுக்கு காகமாகவும் வெள்ளையர் களுக்கு Liyzard (ஊர்வன) ஆகவும் உள்ளது. இங்கு மூன்று கலாசாரக் குறியீடுகளும் இணைக்கப் பட்டன அதுமட்டுமல்லாமல், ஒப்பனைகள், செலவுகள் ஒளியமைப்புகள் தேவையாகப் படவில்லை. மகாகவி பாரதியாரின் எளிமை வசனப் பாடல்கள் எல்லோர் மனதை யும் தொட்டு உணர்த்தியது.

மக்களிடம் சென்று, அவர் களுடன் வாழ்ந்து அவர்களை அறிந்து, பிரச்சினைகளைப் புரிந்து கொண்ட உணர் வினால் உந்தப்பட்டு படைக்கப்படும் கலைகளே மக்கள் கலையாகும். அதாவது மக்கள் வாழ்வின் பிரதிவிம்பங்களே நாடகங்கள்.

"வாழ்க்கைப் போராட்டத்தில் மொழி ஒரு ஆயுதம்" என்பதை மும்மொழி நாடகங்கள் பார்வையாளர் களுக்கு உணர்த்தியுள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

பாரதி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல 6 அலோசாலை கொழும்பு - 3 தொலைபேசி - 574047.

# அகதிமுகாமில் ஆள் கடத்தல்!

சுப்பிரமணிம் கேதீஸ்வரனுக்கு வயது இருபத்து நான்கு. கடந்த பதினொரு மாதங்களாக பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவில் அகதிமுகாமில் தன்னுடைய தாயான திருமதி. செளந்தர பூஷணியுடன் தங்கியிருந்தார். கேதீஸ்வரன், திருமதி செளந்தர பூஷணியின் ஒரேயொரு மகன் ஆவார்.

செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி, பிற்பகல் ஐந்து மணியளவில் "இனந்தெரியாத நபர்களால்" கேதீஸ்வரன் அகதி முகாமில் வைத்துக் "கைது" செய்யப்பட்டு, அகதி முகாமிலுள்ள அலுவலக அறைக்குள் பூட்டி வைக்கப்பட்டுத் தாக்கப் பட்டார். பிற்பகல் ஏழரை மணியளவில் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையிலும் இழுத்து வரப்பட்டு பச்சை நிற ஜீப்பொன்றில் ஏற்றிச் செல்லப்பட்டார். அதன் பின்னர் கேதீஸ்வரன் "காணாமல்" போய்விட்டார்.

அகதி முகாம்களுக்குப் பொறுப்பான சமூக சேவைத் திணைக்களத்தின் எந்த அதிகாரியும் சம்பவம் நடக்கிறபோது அகதிமுகாமில் இருக்கவில்லை. அகதி முகாம்களுக்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் பொறுப்பாக இருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (EPDP) யைச் சேர்ந்தவர்கள் சம்பவம் நடைபெறுகிற போது பிரசன்னமாயிருந்தார்கள். EPDP யினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க திருமதி. செளந்தரபூஷணி அகதி முகாமிற்கு வெளியே இருந்த EPDP யின் பிரதான முகாமிற்குச் சென்று விசாரித்தார். மூன்று நாட்களின் பின்னர் வந்து கேட்கும்படி அவருக்குச் சொல்லப்பட்டது. பல தடவைகள் இந்த முகாமிற்குட் சென்றும் திருப்தியான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று அழுகிறார் திருமதி செளந்தர பூரணி.

ஒரு தடவை, தமிழீழ விடுதலை இயக்கத் (TELO) தைச் சேர்ந்தவர்களே கேதீஸ்வரனைக் கடத்திச் சென்றுள்ளதாக EPDP தரப்பில் திருமதி. செளந்தர பூஷணியிடம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கேதீஸ்வரன், கடந்த ஐந்து வருடங்களாக இதய நோயால் பீடிக்கப்பட்டிருந்தவர் என்றும் தொடர்ச்சியாக மருந்துகள் உட்கொண்டு வருபவர் என்றும் சொல்கிறார் திருமதி. செளந்தர பூஷணி.

மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி. செளந்தர பூஷணியின் குடும்பம் யுத்த அவலத்தாலும், பாதுகாப்பை வேண்டியுமே கொழும்பை நோக்கி அகதி களாகப் புலம் பெயர்ந்த வர்கள். அகதி முகாம்களில் இருப்பவர்களை "விசாரிக்க" வேண்டுமானால் சாதாரண மான ஜனநாயக வழிமுறைகள் மூலம் அரசு விசாரிப்பதில் நியாயம் உள்ளது. ஆனால் ஆட்கடத்தல், சித்திரவதை போன்ற முற்றிலும் சட்ட விரோதமான, அப்பட்டமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கை யாளும் உரிமையை "இனந் தெரியாத நபர்களென்று" வர்ணிக்கப்படும் நமது இயக்ககாரருக்கு யார் தந்தது ?

கேதீஸ்வரனுடைய "மறைவிற்கு" EPDP யா அல்லது TELO வா பொறுப்பு என்பது சரியாகத் தெரியாது. ஆனால் "ஜனநாயக" வழிக்குத் திரும்பிவிட்டதாக(!) சொல்லப் படும் ஏதோ ஒரு தமிழ்க் குழுதான் இதற்குப் பொறுப்பு என்று நம்பப்படுகிறது.

இவ்வகையான நடவடிக்கைகளை "சரிநிகர்" வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாகக் கேதீஸ்வரனை "விடுதலை செய்ய வேண்டுமெனக் கோருகிறோம். இவ்வகையான நடவடிக்கைகள் தொடருமெனில் "ஜனநாயக" வழிக்குத் திரும்பிய குழுக்களின் "ஜனநாயகம்" பற்றியதும் வேறு பல விஷயங்கள் பற்றியதுமான பக்கம் பக்கமான அறிக்கைகளை மலசலக் கூடக் கடதாசிகளாகத்தான் (Toilet Paper) பாவிக்க வேண்டி வரும் என்பதைத் தாழ்மையுடன் சொல்லிக் கொள்கிறோம்.

## மார்ட்டின் என்னல்ஸ் மறைவு

"சரிநிகர்" இதழின் நண்பரும், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமும், இன்ரநஷனல் அலேர்ட் (International Alert) எனும் மனித உரிமைகள் நிறுவனத்தின் நிறுவனரும் செயலாளர் நாயகமுமான திரு. மார்ட்டீன் என்னல்ஸ் அவர்கள் சென்றமாதம் ஐந்தாம் திகதி லண்டனில் காலமானார். அவருக்கு வயது 64.


உலகெங்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மட்டுமல்லாமல் ஒடுக்கப்படுகிற மக்கள் சார்பிலும், இனக்குழுமங்களின் உரிமைகளுக்காவும் குரல் கொடுத்த சர்வதேச வாதிகளில் மார்ட்டினுக்கும் முக்கியமான இடம் உண்டு.

மார்ட்டினுடைய காலத்திலேயே சர்வதேச மன்னிப்புச்சபை அபரிமிதமாக வளர்ச்சியற்றதென்பதும், அவருடைய காலத்திலேயே சர்வதேச மன்னிப்புச்சபை நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டது என்பதும் குறிப்பிடத் தக்கது.

அரசுக் கெதிரான குழுக்கள், இயக்கங்கள் என்பனவற்றின் மனித உரிமை மீறல்களை எடுத்தியம்புவதிலும் கண்டிப்பதிலும் சர்வதேச மன்னிப்புச் சபையின் யாப்பிலும் கட்டமைப்பிலும் இருந்த இடர்ப்பாடு காரணமாகவே மார்ட்டின் அவர்கள் இன்ரநஷனல் அலேர்ட்டை நிறுவ நேர்ந்தது.

இலங்கை தொடர்பாக எப்போதுமே மார்ட்டின் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். சென்ற வருடம் தாய்லாந்தில் நடைபெற்ற World Solidarity Forum on Sri Lanka வின் முக்கிய அமைப்பாளரும் அவரே. 1989 நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ராஜனி திராணகமவின் அறுபதாவது நாள் நினைவு தினக் கூட்டத்திலும் ஊர்வலத்திலும் பங்கு பற்றுவதற்காக மார்ட்டின் யாழ்ப்பாணத்திற்கும் வந்திருந்தார். சென்ற வருட நடுப்பகுதியில் இலங்கை வந்திருந்த மார்ட்டின் எங்களுக்கு அடிக்கடி சொல்வது Take Care Son. மார்ட்டின், உங்களுடைய நினைவும், அன்பும் நேசமும் தோய்ந்த வார்த்தைகளும் எங்களோடு எப்போதும் இருக்கும்.

ஆ-ர்.



சரிநிகர், மாதம் ஒருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ ச்மத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்;
ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு - 3.

சரிநிகர் மாத இதழ் இல 6, அலோசாலை, கொழும்பு 3. இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால் கொழும்பு 10 லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
05.11.91